பக்கங்கள்: 12+IV= பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 8 ஞாயிற்றுக்கிழமை (24-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:362

### சமாதான ஆதரவு மாநாட்டுக்கு முன்

# இன்று ரணிலுடன் பாலா பேச்சு

# இரவு 10 மணிக்கு ஒஸ்லோவில்!



## லண்டனிலிருந்து காலை புறப்படுகிறார் பாரியார் அடேல் மற்றும் மகேஸ்வரனுடன்



லண்டன்,நவம்பர்24

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கமும் இன்று முதல்முறையாகச் சந்தித்துப் பேசுகிறார்கள். வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த இந்தப் பேச்சு இன்று இலங்கை நேரப்படி இரவு 10 மணிக்கு நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் நடைபெறுகிறது என்று லண்டன் புலிகள் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.**

நோர்வே அரசின் அனுசரணையுடன் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு அதாவது சமாதான ஆதரவு மாநாடு ஒஸ்லோவில் நாளை 25 ஆம் திகதி நடக்கிறது.

அதற்கு முன்னர் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்கு பிரதமர் ரணிலும் பாலாவும் சந்தித்துப் பேசுகிறார்கள்.

அதற்காக அன்ரன் பாலசிங்கம் இன்று காலை லண்டனிலிருந்து ஒஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

### நெடுந்தீவு மக்களுக்கு உணவுப் பொருள் எடுத்துச்சென்ற சமயம்

## கடற்படை - மாணவர்கள் முறுகல்: குறிகாட்டுவானில் துப்பாக்கிச் சூடு!

யாழ்ப்பாணம்,நவ.24

நெடுந்தீவில் உள்ள மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச்செல்ல யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்பினருக்கு குறிகாட்டுவானில் அனுமதி மறுக்கப்பட்டதால் ஆத்திரமடைந்த அவர்கள் கடற்படையினரின் நிலைகளைப் பல வந்தமாகத் தாண்டி உள்ளே நுழைந்தனர். இதனால் படையினர் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

குறிகாட்டுவான் இறங்குதுறைப் பகுதியில் நேற்று நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நெடுந்தீவுப் பகுதியிலுள்ள மக்

(12ஆம் பக்கம் பார்க்க)



குறிகாட்டுவானில் மாணவர்கள் கடற்படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளதையும் நெடுந்தீவு செல்ல கடற்படையினர் அனுமதிக்காததை அடுத்து அங்கு மறியலில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மற்றும் பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களையும் படங்களில் காணலாம்.

## ஒஸ்லோ செல்லும் அரச குழு நேற்று இங்கிருந்து புறப்பட்டது

கொழும்பு,நவ.24

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நாளை ஆரம்பமாகவிருக்கும் இலங்கைக்கு ஆதரவு வழங்கும் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக் குழு நேற்று அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டது.

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தை நேற்று அடைந்த இக்குழு அங்கிருந்து இன்றே ஒஸ்லோ நோக்கிப் புறப்படும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சமூகத்திடம் உதவி கோரி அரசு - புலிகள் கூட்டாக அறிக்கை

கொழும்பு,நவ.24

நீண்டகாலப் போரால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்ப உதவுமாறு சர்வதேச சமூகத்திடம் அரசு - புலிகள் இருதரப்பும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

நாளை திங்கட்கிழமை ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்பாக வெள்ளியன்று இருதரப்பும் உத்தியோகபூர்வமாக இந்தக் கோரிக்கையை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்லோ மாநாடு அரசியல் ரீதியில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது

### நோர்வே அமைச்சர் கூறுகிறார்

ஒஸ்லோ,நவ.24

ஒஸ்லோவில் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள சமாதானத்துக்கு ஆதரவான மாநாட்டில் பெருமளவு நிதி உதவி கிடைப்பதற்கான உறுதிமொழி கிடைக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது. ஜப்பானில் நடைபெறவுள்ள மாநாட்டிலேயே இலங்கைக்கு அதிகளவு நிதி உதவிகள் கிடைக்கலாம்.

ஒஸ்லோ மாநாட்டைப் பொறுத்தவரையில் நிதி உதவி முக்கியமான தொன்றல்ல. அதற்கு மாறாக இலங்கைக்கு ஆதரவாக நடைபெறப்போகும் முதலாவது அரசியல்மட்ட மாநாடு இதுவாகும். அந்த வகையில் இந்த மாநாடு மிக முக்கியமானது.

- இவ்வாறு தெரிவித்தார் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரும் சமாதானத்துக்கான நோர்வேக் குழுவின் தலைவருமான விடார் ஹெல்கிஸன்.

ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்கா உட்பட 20 நாடுகள் கலந்துகொள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமத்தில் வீடு மீது நேற்றிரவு கிரனேட் வீச்சு

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயம்

யாழ்ப்பாணம்,நவ.24

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் சமீபமாக வீடு ஒன்றின் மீது நேற்றிரவு 8.20 மணியளவில் இனந்தெரியாதவர்களால் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் அந்த வீட்டிலிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்தனர்.

அந்த வீட்டில் நித்திரையிலிருந்த கந்தசாமி சாந்தா (வயது 40), கந்தசாமி துஷ்யந்தன் (வயது 17),

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் பாதுகாப்புக்கென தேசிய பாதுகாப்புச் சபை

### ஜனாதிபதி மற்றும் பிரதமரும் அதில் அடங்குவர்

கொழும்பு,நவ.24

இலங்கையின் பாதுகாப்புக்கென தேசிய பாதுகாப்புச் சபையொன்று உருவாக்கப்படும். இதில் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், உள்துறை அமைச்சர் ஆகியோர் இடம்பெறுவர்.

நாட்டின் இறைமை, ஐக்கியம் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் இந்தச் சபை முக்கிய கவனம் செலுத்தும். இந்தச் சபைக்கு ஆலோசனைச் சபை ஒன்றும் அமைக்கப்படும்.

படைகளின் உயர்மட்டத்தில் ஏற்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மட்டு-அம்பாறை மாவட்ட தமிழீழ நீதிமன்றம் திறப்பு

## கிழக்கில் புலிகளின் முதலாவது நீதி அமைப்பு

மட்டக்களப்பு,நவ.24

கிழக்கு மாகாணத்தில் முதலாவது தமிழீழ மாவட்ட நீதிமன்றம் பட்டிப்பளையில் நேற்றுக் காலை 10 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்குப் பொதுவாக அமைக்கப்பட்டுள்ள இந்த நீதிமன்ற ஆரம்ப வைபவம் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் தேசியக் கொடியை ஏற்றியதுடன் ஆரம்பமானது.

புலிகளின் நீதி, நிர்வாகப் பிரிவுப் பொறுப்பாளர் பரா நீதிமன்றத்தைத் திறந்துவைத்தார்.

தலைமை நீதியாளர் ஒப்பிலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மட்டு - அம்பாறை மாவட்ட காவல்துறைப் பொறுப்பாளர் கவியமுகன் மங்கள விளக்கேற்றினார். கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் ரமேஸ் பெயர்ப்பலகையை திறந்துவைத்தார்.

நதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

மட்டு - அம்பாறை மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்காகவும், மக்களுக்கு நீதி கிட்டவும் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலில் இந்த நீதிமன்றம் திறக்கப்படுகின்றது. இந்தப் பிரதேச மக்களின் பூரண சுதந்திரத்தைக் காக்கவும் மக்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவும் இந்த நீதிமன்றம் தனது பங்களிப்பை வழங்கும் - என்றார்.

சமாதானச் சூழல் ஏற்பட்ட பின்னர் கிழக்கில் விடுதலைப் புலிகள் ஆரம்பித்துள்ள முதலாவது நீதிமன்றம் இதுவாகும். (ம-3-12)

கொழும்புத்துறை, ஆனந்தன்வடலியில்

# வெடிக்காத நிலையில் மீட்கப்பட்ட ஷெல்கள், மிதிவெடிகள் அழிப்பு

அரியாலை,நவ.24

கொழும்புத்துறை, ஆனந்தன்வடலி வீதிப் பகுதியில் நீண்டகாலமாக வெடிக்ககாத நிலையில் காணப்பட்ட ஷெல்கள் நேற்றய தினம் கண்ணி வெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன.

மேற்படி ஷெல்களுடன் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த கண்ணி மற்றும் மிதிவெடிகளும் இந்தப் பிரிவினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மளக்குடியமரும் மக்களுக்கு இப் பகுதியில் புதையுண்டுள்ள ஷெல்கள் மற்றும் மிதிவெடிகளால் ஆபத்து நேரலாம் என்ற காரணத்தினால் இவை அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

# தென்னை செய்கையாளர்களுக்கு உரமானியம் வழங்க ஏற்பாடு

வீட்டுத் தோட்டங்களில் தென்னை மரம் வளர்ப்போருக்கு உரமானியம் வழங்கப்படவுள்ளது என தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரன் அறிவித்துள்ளார்.

உரமானியம் வழங்கும் திட்டம் டிசெம்பர் 31ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும் என்றும் -

காய்க்கின்ற தென்னை மரங்களுக்கு மூன்று கிலோகிராமும், மற்றவற்றுக்கு ஒரு கிலோகிராம் என்ற அடிப்படையிலும் உரமானியம் வழங்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

அச்சுவேலிப் பண்ணையில் செய்கைபண்ணப்பட்டுள்ள தென்னம் நாற்றுக்கள் விரைவில் பிரதேச செயலகங்கள் மூலம் தேவைப்படுவோருக்கு வழங்கப்படும் என்றும் - அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-152)

# ஜனநாயகம், அடிப்படை உரிமை என்ற பெயரில் ஈ.பி.டி.பி. சமாதான சூழலைக் குழப்புகின்றது

## ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி அறிக்கை

ஜனநாயகம், அடிப்படை உரிமை என்று கூறிக்கொண்டு ஈ.பி.டி.பியினர் பம்மாத்து வேலைகளில் ஈடுபட்டு சமாதானப் பேச்சுக்களைக் குழப்பி அதில குளிர்காய எண்ணுகின்றனர்.

குடாநாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஏறத்தாழ கடந்த ஒருவார காலமாக நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேறக் கோரி அங்குள்ள மக்கள் போராடி வருகின்றனர். ஆனால், அரசியல் செய்வது தமது அடிப்படை உரிமை என்ற பெயரில் ஈ.பி.டி.பியினர் பொலீஸ், கடற்படையினர் பாதுகாப்புடன் தொடர்ந்தும் நெடுந்தீவில் தங்கியுள்ளனர்.

யாரும் எங்கும் அரசியல் செய்வதென்பதும், தமது கருத்துக்களைக் கூறுவதும் அவர்களது அடிப்படை உரிமை. ஆனால், ஈ.பி.டி.பியினர் மக்கள் மீது நடத்திய அநாகரிகமான தாக்குதலால்தான் அவர்கள் முதலில நெடுந்தீவில் இருந்து வெளியேற்றப் பட்டார்கள. அவர்கள் ஆயுதபாணிகளாக அங்கு தனிராஜ்ஜியம் நடத்திய பொழுது உதவி அரசாங்க அதிபர் உட்பட எத்தனை கொலைகள் நடைபெற்றன. 1994இல் ஈ.பி.ஆர்.எல்.எவ். தீவுப் பகுதிகளுக்கு தேர்தல் பிரசாரத்துக்கு சென்றபொழுது அவர்கள் அங்குள்ள கடைகளில் தேநீர் அருந்தவோ, கோயில் திண்ணையில் படுத்துறங்கவோ ஈ.பி.டி.பியினர் அனுமதிக்கவில்லை. பிரசாரத்துக்குச் சென்ற எமது தோழர்கள் பொதுமக்கள் என்ற பெயரில் ஈ.பி.டி.பியினரால் அடித்து விரட்டப் பட்டனர்.

இதேபோல் 2001ஆம் ஆண்டு தேர்தலின்போது பிரசாரத்துக்குச் சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு தோழர்களும், வேட்பாளர்களும் தாக்கப்பட்டனர். அநியாயமான கொலைகளும் தாக்குதல்களும் அப்போது நடைபெற்றன. அவற்றை மக்கள் செய்ததாகவே ஈ.பி.டி.பியினர் நியாயப்படுத்தினர். அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரசாரத்துக்குச் சென்றதைத் தடுத்து அவர்களைக் கொலை செய்தது நியாயமென்றால் இன்று உங்கள் அடாவடித்தனங்களை எதிர்த்து உங்களை வெளியேறக்கோரி மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வது நியாயம் தானே?

இன்று அடிப்படை உரிமைக்காகவும் அரசியல் கட்சியின் ஜனநாயகத்துக்காகவும் பொலீஸாருடனும், கடற்படையினருடனும் தாங்கள் போராடுவதாகக் காட்டிக்கொள்வது அவர்களது பம்மாத்து அரசியலையே காட்டுகின்றது. மக்களைத் திரட்டி உஙகளைப் பாதுகாத்துக்கொள்ள முடியாத நீங்கள் பொலீஸாரினதும், கடற்படையினரதும் பாதுகாப்புடன் எவ்வாறு ஜனநாயகத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும்? நீங்கள் முன்னர் செய்த அடாவடித்தன அரசியல்தான் இன்று உங்களுக்கு எதிராகத் திரும்பியுள்ளது என பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து பேச்சைக் குழப்பி அதில் நீங்கள் குளிர்காய நினைத்தால் நீங்கள் தவறிழைக்கின்றீர்கள் என்றே அர்த்தமாகும். பேச்சைக் குழப்புவது கடினமான செயல் என்பதனையும் புரிந்துகொள்ளுங்கள். எனவே நெடுந்தீவுடன் சம்பந்தமே இல்லாத இளைஞர்களை அங்கு அனுப்பி அநாவசியமான பிரச்சினைகளை உருவாக்காமல் பேச்சு சிறந்தமுறையில் நடக்க ஒத்துழைப்பது இன்றைய தேவை என்பதையும் புரிந்துகொள்ளுங்கள்.

மக்களால் கடந்த தேர்தலில் முற்றாக ஒதுக்கப்பட்ட ஈ.பி.டி.பியினருக்கு எதிரான போராட்டம் என்பது எமது நேரத்தை வீணடிப்பதும் அத்தியாவசியம் அற்றதும் ஓர் அமைப்புக்கு அதீத முக்கியத்துவம் கொடுப்பதும் ஆகும். எனவே, எமது போராட்டங்களை மக்களின் எதிர்கால சுபீட்சங்களுக்கான போராட்டங்களாகவும் திட்டமிடுவோம - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.24

ஜேர்மன் தொண்டு நிறுவனமான 'பேர்க்கொவ் பவுண்டேசன்' (Bergof Foundation) பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் 'உயர் பாதுகாப்பு வலயமும் சமாதானமும்' என்னும் தலைப்பிலான கலந்துரையாடல இன்று காலை 9.30 மணிக்கு பண்டத்தரிப்பில் உள்ள தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

குடாநாட்டில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கான இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தும் நடைமுறை விடயங்கள் பற்றி இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

இக்கலந்துரையாடலில் இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்துகொள்வர். (எ-10-8)

பிரதேச செயலர் பதில்கடமை புரியும் இடங்களில்

# மீள்குடியமர்வு, புனர்வாழ்வுப் பணிகள் உதவித்திட்டமிடல் பணிப்பாளர்களிடம்!

## யாழ். செயலகக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பத்துப் பிரதேச செயலர் பிரிவுகளில் மீள் குடியமர்வு, புனர்வாழ்வு பணிகளை அந்த அந்தப் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களே மேற்கொள்வர்.

யாழ்.செயலகத்தில் நடைபெற்ற புனர்வாழ்வு பணிகள் தொடர்பான கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வுப்பணிகளை மேற்கொள்வதில் எதிர்நோக்கப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு நிரந்தர பிரதேச செயலர்கள் இல்லை என்று இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து பிரதேச செயலர்கள் பதில் கடமை புரியும் பிரதேசங்களில் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு பணிகளைக் கையாளும் பொறுப்பு அப்பிரதேச உதவிதிட்டமிடல் பணிப்பாளர்களிடம் ஒப்படைப்பது என முடிவு செய்யப்பட்டது.

மீளக்குடியமரும் மக்களுக்கு அளிக்க வேண்டிய உதவிகள் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுத்தல் ஆகியன தொடர்பாக இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-3)

# முழங்காவிலில் நாளை மாவீரர் எழுச்சி விழா!

## விசேட படையணிகள் அணிவகுப்பு

மாவீரர் தினத்தை ஒட்டிய எழுச்சி விழா மன்னார் மாவட்டம் முழங்காவிலில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட நிகழ்ச்சியாக கடற்புலிகளினதும் கரும்புலிகளினதும் விசேட படையணிகள் பங்குபற்றும் விசேட அணி நடை இடம்பெறவுள்ளது. தொடர்ந்து முழங்காவில் கலையரங்கில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பூநகரி பிரதேச கடற்றொழிலாளர்கள் சங்கங்கள், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியனவற்றைச் சேர்ந்தோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு மாவீரர் நினைவாலய திறப்பு

## கிளிநொச்சியில் நாளை நடக்கும்

கிளிநொச்சி,நவ.24

விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியினால் கிளிநொச்சி, கோவிந்தன் கடைச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலயத்தின் திறப்புவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும் இந்த வைபவத்தில் இந்தப் படையணியின் தளபதிகள் கலந்துகொள்வர்.

இந்தப் படையணியைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர், உறவினர் மற்றும் போராளிகளை இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-3)

## அரியாலைப் பகுதியில் நுளம்புப் பெருக்கம்

கொழும்புத்துறை,நவ.24

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. யுத்தஅனர்த்தங்கள் காரணமாக பல வீடுகள் இடிபாடுகளாகக் காணப்படுவதும் - இடம்பெயர்ந்துள்ள மக்களின் வீடுகள், காணிகள் மற்றும் பொது இடங்களில் பற்றைகள் வளர்ந்துள்ளமையுமே நுளம்புப் பெருக்கத்துக்கு காரணம் என்று கூறப் பட்டது. (எ-30)

# அவிசாவளை, வெல்லம்பிட்டி பகுதியில் 18 1/2 கிலோ ஹெரோயின் பிடிபட்டது

## இருவர் கைது; ரூ.40 லட்சமும் கைப்பற்றப்பட்டது

கொழும்பு,நவ.24

அவிசாவளை, வெல்லம்பிட்டி ஆகிய இடங்களில் இருந்து 4 கோடி ரூபாவுக்கும் கூடுதல் பெறுமதி வாய்ந்த 18 1/2 கிலோ ஹெரோயின் போதைப பொருள் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டது. இரண்டு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த வியாழன் மாலை வெல்லம பிட்டிப் பகுதியில் 2 1/2 கிலோ ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 40 லட்சம் ரூபாவும் கைப்பற்றப்பட்டது. அவர் கொடுத்த தகவலையடுத்து இரண்டாவது சந்தேக நபர் அவிசாவளைப் பகுதியில் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 16 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. இந்தியாவிலிருந்து இந்த ஹெரோயின் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் நம்புகின்றனர்.

கடந்தகாலங்களில் கைப்பற்றப் பட்ட ஹெரோயின் போதைப்பொருள்களில் இதுவே ஆகக்கூடுதலான அளவு என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர். (ஏ)



மீட்கப்பட்ட ஹெரோயின் மற்றும் பணம்.



ஹொங்கொங் துறைமுகத்துக்கு வந்துசேர்ந்துள்ள அமெரிக்கக் கடற்படையின் விமானம் தாங்கிக் கப்பலான 'யு.எஸ்.எஸ். கொன்சல்ரேசன்' என்ற பாரிய கப்பலையே படத்தில் காண்கிறீர்கள். இக்கப்பலின் வருகையை ஒட்டி அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு. (ஐ)

# 9 இந்தியப் படையினர் நிலக்கண்ணிக்குப் பலி!

## மற்றொரு தாக்குதலில் 19 பேர் படுகாயம்

ஸ்ரீநகர், நவ24

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் படையினர் பயணஞ்செய்த பஸ் ஒன்றின் மீதும் டிரக் மீதும் தீவிரவாதிகள் நடத்திய நிலக்கண்ணித் தாக்குதல்களில் ஒன்பது படையினர் பலியாகினர். 19 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் பலர் ஆபத்தான கட்டத்தில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

முதலாவது தாக்குதல் பஸ் மீது நடத்தப்பட்டது. மலைப் பகுதியில் தூக்கி வீசப்பட்ட பஸ் சின்னாபின்ன மாகிக்கிடந்தது. ஒன்பது படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். ஸ்ரீநகருக்குத் தெற்கே மன்டான என்னும் இடத்தில் இது நடந்தது.

ஸ்ரீநகருக்குத் தெற்கே 75 கிலோ மீற்றர் தொலைவில் இரண்டாவது தாக்குதல் டிராக்டர் மீது நடத்தப்பட்டது. இதில் 19 படையினர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர்.

காயமடைந்த அனைவரும் ஹெலிகொப்டர்கள் மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தாக்குதல் நடத்திய தீவிரவாதி களைப் பொலீஸார் தேடி வருகின்றனர். (ஐ)

### நேபாளத்தில் 2000 பாடசாலைகள் மூடப்பட்டன!

காத்மண்டு,நவ.24

மாவோ தீவிரவாதிகள் வன்முறை எதிரொலி காரணமாக சமீப மாதங்களில் நேபாளத்தில் 2000 பள்ளிகள் மூடப்பட்டுள்ளன என்று மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த சுபோத் ராய் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் கிழக்கு, மேற்கு நேபாளத்தைச் சேர்ந்த கிராமப்புறங்களில் இப் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. இதனால் 2 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# உலக அழகிப் போட்டி நைஜீரியாவில் ரத்து!

## லண்டனில் நடத்த ஏற்பாடு கலவரங்கள் தொடர்கின்றன

அபுஜா,நவ.24

நைஜீரியாவின் தலைநகர் அபுஜாவில் ஆரம்பமான 'மிஸ் வேர்ல்ட்'- உலக அழகு ராணிப் போட்டி ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. அபுஜாவில் நடைபெற ஏற்பாடான இறுதிப் போட்டியை தற்போது லண்டனுக்கு இடம் மாற்றியிருக்கின்றனர் ஏற்பாட்டாளர்கள்.

இப்போட்டியை நடத்துவதற்கு அங்கு முஸ்லிம் இளைஞர்களிடையே கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. அங்கு பரவலாக இடம்பெற்ற வன் செயல்கள் கட்டு மீறியிருக்கின்றன. தெருக்கலவரங்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

கடுனா என்ற நகரில் வெள்ளிக்கிழமை தொழுகைக்குப்பின் திரண்ட நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் வீதிகளில் வன்முறைகளில் இறங்கினர்.

அழகு ராணிப்போட்டி பரவலான ஆதரவின் மத்தியிலேயே நைஜீரியாவில் நடத்த ஏற்பாடாகியிருந்தது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். நைஜீரியாவுக்கு வெளியே போட்டி தொடர்ந்து இடம்பெறும் என்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர். இறுதிப்போட்டி டிசெம்பர் 7 ஆம் திகதி லண்டனில் நடத்தப்படும்.

நைஜீரியா அதிபர் ஒலுகேஜன் ஒபசன்ஜோ தொலைக்காட்சியில் தோன்றி உரையாற்றுகையில் அமைதி காக்குமாறு மக்களிடம் கேட்டுக்கொண்டார். எனினும் வன் செயல்கள் பரவி வருகின்றன. கத்திகள், பொல்லுகள், தடிகள் சகிதம் வீதிகளில் அலையும் கும்பல்கள் பொலீஸாரையும் தாக்கத் தொடங்கியுள்ளன. பொலீஸார் ஒருவர் காயமடைந்ததைத் தொடர்ந்து 27 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மூன்று தினங்கள் நடந்த மோசமான கலவரங்களை அடுத்து கடுனா நகரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)



உலக அழகிப் போட்டிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நைஜீரியாவில் இடம்பெற்று வரும் கலவரங்களில் தெருவில் உயிரிழந்த ஒருவரது உடலை நைஜீரிய வாசிகள் இருவர் புரட்டிப் பார்க்கின்றனர். (ஐ)

சிவிலியன் பஸ் மீதான தாக்குதல்

# மக்கள் போர்ப்படை மன்னிப்புக் கோரியது!

பெங்களூர்,நவ.24

தென்னிந்திய மாநிலமான ஆந்திராவில் 14 சிவிலியன்களைப் பலி கொண்ட பஸ் குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்கு இடதுசாரி இயக்கமான மக்கள் போர்க்குழு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கோரியுள்ளது.

கடந்த திங்களன்று மக்கள் போர்க்குழு நடத்திய குண்டுத் தாக்குதலில் 14 சிவிலியன்கள் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல் தவறுதலாக நடத்தப்பட்டது என்று போர்க்குழுவின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான மராக்கபுலம் பாஸ்கர் எழுத்து மூலம் அறிவித்திருக்கிறார்.

வாரங்களில் உள்ளூர் பத்திரிகைகளுக்கு அவர் அனுப்பிய அறிக்கையில் 'இது மறக்கமுடியாத தவறு' என்று குறிப்பிட்டு அதற்காகப் பொது மக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

வன்முறைத் தாக்குதல் ஒன்றுக்காக மக்கள் போர்க்குழு வருத்தம் தெரிவித்திருப்பது இதுவே முதல் முறை என்று தெரிவிக்கப்படுகிறது.

# விமானத்தை கடத்த முயற்சி

கனடாவின் மொன்றியல் விமான நிலையத்திலிருந்து பாரிஸ் நோக்கி வந்த கொண்டிருந்த பிரான்ஸ் விமானம் ஒன்றைக் கடத்த எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டிருக்கிறது.

விமானத்திலிருந்த நபர் ஒருவர் விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாகக் கூறி பயணிகளை மிரட்டிவிட்டு விமானத்தை திசை திருப்புமாறு மிரட்டியுள்ளார். எனினும் அருகில் இருந்த பயணிகள் சிலர் அந்த நபரை மடக்கிப் பிடித்து விட்டனர். விமானம் பாதுகாப்பாக பாரிஸ் விமான நிலையத்தில் தரையிறங்கியதும் அந்த நபர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ)



மேற்குக்கரையில் இஸ்ரேலிய இராணுவ டாங்கி மீது கற்களை வீசித் தாக்கும் பலஸ்தீன இளைஞர்கள்.



பாகிஸ்தானில் புதிய பிரதமராக பதவியேற்றிருக்கும் மீர் சபாருல்லா கான் ஜமாலி தொழுகையில் ஈடுபட்டிருக்கும் காட்சி

### பாகிஸ்தானில் நிலநடுக்கம் 30 பேர்சாவு!

இஸ்லாமாபாத்,நவ.24

பாகிஸ்தானில் வெள்ளிக்கிழமை அதிகாலை அடுத்தடுத்து மூன்று முறை ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக 30 பேர் இறந்தனர். நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் வடக்குப் பாகிஸ்தானில் சிந்து நதிக்கும் அஷ்டோர் நகருக்கும் இடையே உள்ளூர் நேரப்படி அதிகாலை 2.32 மணிக்கு ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 5.5, 4.5, 5.8 என பதிவானது. (ஐ)

### அணுசக்தி நீர்மூழ்கியில் தீ!

மொஸ்கோ,நவ.24

ரஷ்யாவுக்குச் சொந்தமான - அணுசக்தியால் இயங்கும் - நீர் மூழ்கிக் கப்பலில் தீவிபத்து இடம்பெற்றிருக்கிறது.

விளாடிவாஸ் ரொக்துறை முகத்தில் கப்பல் தரித்து நின்ற வேளை அதில் உள்ள ஹீற்றர் கருவியில் தீ பற்றிக்கொண்டது.

இக்கப்பல் 5 ஆண்டுகளுக்கு முன்பே சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுவிட்டதால் அதில் அணு ஆயுதங்கள் எதுவும் இருக்க வில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

### இளவரசிக்கு தண்டனை!

லண்டன்,நவ.24

வரலாற்றில் முதல் தடவையாக இங்கிலாந்து ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ராணி எலிசபெத்தின் ஒரே மகளும், இளவரசர் சார்ள்ஸின் தங்கையுமான இளவரசி ஆன், கடந்த வாரம் தன் கணவருடன் பூங்காவுக்கு சென்றார். அப்போது தன் நாய்களை ஏவி பூங்காவுக்கு வந்த குழந்தைகளை கடிக்கவிட்டார்.

இது தொடர்பாக ஆனி அவர் கணவர் இருவர் மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் இளவரசிக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து சுலோ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அவரது கணவர் விடுதலை செய்யப்பட்டார். (ஐ)



ஸ்ரீநகருக்கு தெற்கே 90 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மன்டனா என்னும் இடத்தில் நடத்தப்பட்ட நிலக்கண்ணித்தாக்குதலில் சின்னாபின்னமாகிக் கிடக்கும் பஸ்வண்டி.

நீலக் கடலோரம் இயற்கை அரவணைப்பில் உல்லாசப் பயணிகளை மகிழ்விக்கும்
இலங்கை உல்லாசப் பயணச் சபையின் அங்கீகாரம்பெற்ற
உன்னதமான விடுதி

YARL BEACH INN
(Tourism - Travels - Entertainment & Catering)
Reg No.-14186

தங்குமிடம், பொழுதுபோக்கு, மூன்று வேளையும் சுவைதரு
உணவு, பிரயாண வசதிகள்
இவை அனைத்தும் ஒருங்கே உங்களுக்காக.
யாழ் பீச் இன்
(C/25036) இல. 8, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.



விற்பனை ஆலோசகர்கள்/பிரதிநிதிகள்
SALES CONSULTANTS / REPRESENTATIVES
யாழ்ப்பாணம்

சிலிங்கோ ஆயுட் காப்புறுதியை பிரதிநிதித்துவப்படுத்த விரும்புபவர்களுக்கு

அவர்களது வருமானம் தரகை (COMMISSION) அடிப்படையாகக் கொண்டும், செயற்திறமை, தனியார் சொந்த ஈடுபாடு என்பவற்றிலேயே முற்றுமுழுதாகத் தங்கியுள்ளது. ஆயுட் காப்புறுதித் துறையில் அனுபவம் விரும்பத்தக்கது. ஆயினும் அது கட்டாயம் இல்லை.

விற்பனைகளில் முன் அனுபவம் நிச்சயமாகக் கருத்திற் கொள்ளப்படும். கணிதம் உள்ளிட்ட க.பொ.த. சாதாரண தர சித்தி அடிப்படைத் தகைமையாகும். இத்துடன் நல்ல குடும்பப் பின்னணி தேவையாகும்.

ஆண், பெண் இருபாலாரும் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 30.11.2002

சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்
இல. 560, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(முதலாவது மாடி செலான் வங்கி கட்டடம்) (சி 25009)



புதிய வெற்றிடம்

விற்பனை நிறைவேற்று அதிகாரிகள்

தனியார் காப்புறுதித் துறையில் கடந்த ஐம்பது வருடமாகத் தொடர்ச்சியாக முன்னோடியாகத் திகழும்

சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்
(ஆயுட் பகுதி)

நிறுவனத்தினர் தங்களது கிளைகளுக்குத் தகுதிவாய்ந்த விற்பனை நிறைவேற்று அதிகாரிகளை நியமிக்க விரும்புகின்றனர்.
இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் குறைந்தது
2 வருட முன் அனுபவமும் A/L சித்தியும் அல்லது 4 வருட முன் அனுபவமும் O/L சித்தி அடைந்தவராகவும் ஆங்கில அறிவுள்ளவராகவும் இருத்தல் அவசியமாகும்.

தகுதியுடையோர் 30.11.2002இற்கு முன் விண்ணப்பிக்கவும்.
சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
இல. 560, ஆஸ்பத்திரி வீதி,
(முதலாவது மாடி, செலான் வங்கி கட்டடம்)
யாழ்ப்பாணம். (சி 25010)


# மானிப்பாய் இந்துவுக்கு விளையாட்டு உபகரணம் அன்பளிப்பு

வலிகாமம் தெற்கு,நவ.24

மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டுக்கென ஒரு லட்சம் ரூபா பெறுமதியிக்க விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கல்லூரியின் பழைய மாணவனான எஸ்.சுரேஸ்குமார் இந்த விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-152)

# நெறியாளர் குழு விரைவில் தெரிவாகும்

வடமராட்சி கிழக்கு,நவ.24

வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் புதிய நெறியாளர் குழுவினைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சமாதானச்சூழ்நிலை ஏற்பட்டதை அடுத்து அப்பிரதேச மக்கள் சுமார் 6 வருடங்களுக்குப் பின்னர் ஒரு மித்து புதிய நெறியாளர் குழுவினைத் தெரிவு செய்யவுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் 30 ஆம் திகதி சகல கிளைகளிலும் கிளைக்குழு தெரிவு செய்யப்படும்.

தற்போது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் நியமனம் செய்யப்பட்ட 3 பேர் கொண்ட நெறியாளர்குழுவே பதவி வகித்து வருகின்றது. (எ-182)

# தென்னம் நாற்று வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்பல்கலைக்கழக விவசாயத் தகவல் தொடர்பு மையத்தினால் இலவச தென்னம் நாற்றுக்கள் வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் திருமதி சி.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி க.இராசதுரை, ஆசிரியர் ஆறு.திருமுருகன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ்மாவட்ட பொறுப்பாளர் திலீபன் வேல், தென்னை பயிர்ச்செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் சி.சிவேந்திரன், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

இலவசமாக வழங்கப்படவுள்ள தென்னம் நாற்றுக்களுக்கான நிதியினை கனடாவில் வசித்து வருகின்ற திருநெல்வேலி, முடமாவடியைச் சேர்ந்த இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் எஸ்.அருணாசலம் வழங்கியுள்ளார். (எ-10)

# ஜி.சீ.ஈ.(சா.த.) மாணவருக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.24

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிலைய இணைப்புக் குழுவின் இளைஞர் சபை நடத்தும் ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு திருநெல்வேலி சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று ஞாயிறு தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 9 மணிமுதல் 12 மணிவரையும் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படவுள்ளன. (எ-10)

# பல்கலை மாணவன் கொலையில் மேலும் இருவர் அடையாளம் காணப்பட்டனர்

கொழும்பு,நவ.24

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் சமந்தவின் படுகொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட 40 மாணவர்களில் நான்கு பேர் இனங்காணப்பட்டுள்ளனர். கங்கொடவில மஜிஸ்திரேட் நீதிமன்றில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பிலேயே இருவரும் அடையாளம் காணப்பட்டனர்.

மேலும் இரு அணிவகுப்புகள் நடைபெறவுள்ளதாக பிரதி பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

இதேவேளை, மற்றொரு சந்தேக நபர் நேற்று முன்தினம் மிரிஹான பொலீஸில் சரணடைந்தார். (ஒ)


தமிழின் சிறப்பு யாழ்ப்பாணம்...
கற்றாளைச்சாற்றின் சிறப்பு
போரோசொப்ட் சோப்




முதன்முறை கேட்டு வாங்குங்கள்
மறுமுறை கேட்டு வாங்குவீர்கள்...

சகல விதமான சருமங்களுக்கும் ஏற்ப சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது.

JEGHAN PHARMACY
No.482/3, Hospital Road, Jaffna. Tel.021-2194, 3191



ரஷ்யாவில் உயர்கல்வி

மருத்துவத்தில் MD
(ஆங்கில மூலமானது)

KURSK STATE மருத்துவப் பல்கலைக்கழகம் WHO இலங்கை மருத்துவக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

- ★ ஆகக்குறைந்த அனுமதிக்கான தகைமை G.C.E.A/L
- ★ ஏற்புடைய கற்கைநெறி, விடுதிக்கட்டணங்கள்
முதலாம் வருடம் - 3300 U.S.D.
இரண்டாம் வருடத்திலிருந்து 2800 U.S.D.

(கட்டணங்களை தவணைக்கட்டணங்களாகச் செலுத்தலாம்)
அனுமதிக்கும், மேலதிக தகவல்களுக்கும்

தொடர்பு: Uthayajothy
(Final Year Student in the University)
T.P.: Local 0777-984800, 01-334284
T.P.: Russia - 007071 2335823
E.Mail: uthayavan@yahoo.com
(C/24914)



கூரை அமைப்பில் புதிய அலை
அன்டன் சுபர் ஷெல்டா
ஆடிவிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்ததுவே




அன்டன் சுபர் ஷெல்டா

அன்டன்
சுபர் ஷெல்டா
சரியாகப் பொருத்துங்கள்

Super Shelta

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்தனிஸ் இண்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 324261-5, 337283-5 பெக்ஸ்: 446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 ★ 03 ★ 1941



விண்ணில் 26 ★ 11 ★ 1991

அமரர் செல்லத்துரை கனகசபாபதி
(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், ஒட்டுசுட்டான்)
திதி: 24.11.2002

ஆண்டுகள் பதினொன்று சென்றாலும்
அறியவில்லை உம் நினைவு!
ஆண்டாண்டு சென்றாலும்
நீங்காது எம் நினைவில்!

திருநெல்வேலி மத்தி, திருநெல்வேலி. (10873)

உமது பிரிவால் வருந்தும்:
மனைவி, சகோதரங்கள், மைத்துனர்கள்.

# வேலைநிறுத்தத்தில் யாழ்.தாதியர் உடனடியாக பங்கேற்கமாட்டார்கள்

## நோயாளர் நலன் கருதி தீர்மானம்

யாழ்ப்பாணம்,நவ.24

நாடளாவிய ரீதியில் தாதியர்கள் நேற்றுமுதல் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தில் உடனடியாகத் தாம் பங்குகொள்ளப்போவதில்லை என யாழ்.ஆஸ்பத்திரியின் பொது வைத்திய தாதிகள் சங்கம் அறிவித்துள்ளது.

வைத்திய சேவைகள் தொடர்பாக யாழ்.குடாநாட்டில் நிலவும் நிலவரங்களைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் இந்த முடிவைத் தாம் எடுத்துள்ளதாக மேற்படி சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ உயிர் காக்கும் சிகிச்சைகள் அவசரத்துக்கு வழங்கக்கூடிய தனியார் வைத்திய வசதிகள் யாழ்.மாவட்டத்தில் இல்லாமை.

★ மழைகால நிலைமைகளினால் அகதிகள் முகாம்களில் வசிக்கு மக்கள் தொற்றுநோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளமை.

★ உயிர் காக்கும் நடவடிக்கைகளுக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் நோயாளர்களை உடனடியாக வேறு ஆஸ்பத்திரிகளுக்கு சிகிச்சைக்காகக் கொண்டுசெல்வதற்கான போக்குவரத்து வசதியின்மை.

★ வடமாகாண மக்களின் வாழ்நிலை நெருக்கீடுகளுடன் எமது வேலைநிறுத்தப் போராட்டம் அவர்களின் உயிருக்கும் ஆரோக்கியத்துக்கும் பாரிய துன்பத்தினை உண்டாக்கும்.

மேற்படி முடிவுகள் எமது தாய்ச் சங்கத்தின் அனுசரணையுடன் எடுக்கப்பட்டுள்ளன.

எமது கோரிக்கை குறுகிய காலத்தினுள் நிறைவேறாது போனால் தாய்ச் சங்கத்துடன் இணைந்துகொள்ள நாமும் நிர்ப்பந்திக்கப்படுவோம் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-15)

# உதயன்

## வேலையற்றோர் எண்ணிக்கை

குடாநாட்டு சனத்தொகையில் 28.3 சதவீதத்தினர் - அதாவது 83 ஆயிரத்து 61 பேர் - வேலையற்றோராக இருக்கின்றனர் என்று யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மதிப்பிட்டிருக்கிறது. கடந்த ஆண்டு முதல் இணையம் நடத்திவந்த ஓர் ஆய்வில் இத்தகவல் வெளிப்பட்டிருக்கிறது. யாழ்.மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வுமூலம் வெளிப்பட்டிருக்கும் தகவல் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

போர் ஓய்ந்த நிலையில் அபிவிருத்தி பற்றியும் புனர்வாழ்வு குறித்தும் இயல்பு வாழ்க்கை தொடர்பாகவும் பரவலாகப் பேசப்பட்டு வரும் தற்போதைய சூழ்நிலையில அரசசார்பற்ற நிறுவனம் வெளியிட்டிருக்கும் இந்த ஆய்வுத் தகவல் கவனத்தில் எடுக்கப்படவேண்டியது.

15 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்களிடையே கீழ் உழைப்பில் ஈடுபடும் குடும்பப் பெண்கள் தவிர்ந்த ஏனையோரில் 83 ஆயிரம் பேர் வேலையின்றி இருப்பது ஆய்வில் தெரியவந்திருக்கிறது.

"வேலையற்றோர் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரச வேலை வாய்ப்புகளை வழங்கினால் மட்டும் போதாது. அதன்மூலம் ஒரு சிறிய எண்ணிக்கையானவர்கள் மட்டுமே வேலை பெறமுடியும். தற்போது எடுக்கப்படவேண்டிய அவசிய நடவடிக்கை அரசு பெரிய அளவிலான தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்துவதாகும். கொள்கைகள் வகுக்கப்பட்டு சாத்தியமான பல திட்டங்களை வகுப்பதன்மூலமே இது சாத்தியப்படும்' - என்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தனது ஆய்வின் முடிவில் ஆலோசனை தெரிவித்திருக்கிறது.

இரு தசாப்தங்களாக நீடித்த போரினால் தமிழர் பிரதேசங்களின் தொழில் வளங்கள் பேரழிவுகளைச் சந்தித்திருக்கின்றன.

பிரதான தொழில் வளங்கள் அழிந்துள்ள அதே வேளை தொழில் வாய்ப்புகளுக்கு அடித்தளமான வளங்கள் பல முடக்கப்பட்டிருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகள் என்று குறிப்பிட்டுக் கூறும் அளவுக்கு ஒன்றிரண்டு தொழிற்சாலைகளே குடாநாட்டில் இயங்கின. அவையும் போரினால் இழுத்துமூடப்பட்டுவிட்டன.

கல்வி சார்ந்த தொழில் வாய்ப்புகள், கல்வி சாரா தொழில் வாய்ப்புகள் இரண்டுமே சம அளவில் பாதிக்கப்பட்டு வந்துள்ளன.

பெரும் எண்ணிக்கையான படித்த இளைஞர்கள் வேலைவெட்டி இன்றி வீதிகளில் அலையும் நிலை இன்றும நீடிக்கிறது. யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருவது இதற்கு தக்க சான்றாகவுள்ளது.

திறமைக்கான - கல்வித் தராதரத்துக்கான தொழில் - என்ற நிலைமை மாறி வருமானத்துக்காக வயிற்றுப் பிழைப்புக்காக - தொழில் தேடி அலைகின்ற பல்கலைக்கழகப் பட்டதாரிகளை இப்போது சர்வசாதாரணமாகக் காணமுடிகிறது.

குடாநாட்டில் அதிகரித்து வருகின்ற குற்றச்செயல்களைக் கவனத்தில் எடுப்போர் வேலை வெட்டி இல்லாத இளைஞர்களும் - பாடசாலை செல்லாத சிறுவர்களும் தான் இத்தகைய செயல்களில் அதிகம் சம்பந்தப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

வேலைவாய்ப்புக்களுக்காக அரசின் திணைக்களங்களாலும் தனியார் துறையினராலும் விண்ணப்பங்கள் கோரப்படும்போது அவற்றுக்கு விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை வேறு எந்த மாவட்டங்களையும்விட குடாநாட்டில்தான் மிக அதிகம் என்று பரீட்சைகள் ஆணையாளர் திணைக்கள வட்டாரங்கள் கூறுகின்றன.

தமிழ் இளைஞர்களின் உயர் கல்வியை, வேலை வாய்ப்புகளைப் பறித்த ஆட்சியாளர்கள் மீதான கோபாவேசம்தான் பெரும்பாலான இளைஞர்களை ஆயுதப் போராட்ட அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு உந்தித் தள்ளியது என்பது கடந்தகால வரலாறு. வேலையற்ற இளைஞர்களில் ஒரு சாரார் போராட்டத்தின்பால் ஈர்க்கப்பட மறுசாரார் தொழில்வாய்ப்புகளை நாடி வெளிநாடுகளுக்குப் படையெடுத்தனர்.

இப்போது போர் ஓய்ந்து நாட்டில் சமாதானம் நிலைபெறும் என்ற நம்பிக்கை வலுப்பெற்றிருக்கிறது. தொழில் நிமித்தமும் வேறு காரணங்களுக்காகவும் தமிழ் இளைஞர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயரும் வாய்ப்புக்கள் அருகி வருகின்றன. அப்படி வெளிநாடுகளுக்குச் சென்று வாழ்ந்த பலரும்கூட இப்போது தாயகம் திரும்பவேண்டிய நிலைமை உருவாகி வருகிறது. இதனால் தொழில் வாய்ப்புக்கான போட்டி மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

இந்தப் பின்னணியில் - வேலையற்றோர் தொடர்பான பிரச்சினை அணுகப்படவேண்டும். அரசசார்பற்ற இணையத்தின் ஆய்வுத் தகவலை ஒரு தொடக்கமாகக் கொண்டு தொழில் இன்றி இருப்போர் தொடர்பான ஆய்வுகள் மேலும் விரிவாக - ஆழமாக - நடத்தப்பட்டு வேலை வாய்ப்புகளுக்கான திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

வேலைவாய்ப்புகளை வழங்குவது என்ற திட்டம் வெறுமனே வேலையற்றோரின் பெயர் விவரங்களைப் பதிவுசெய்யும் 'வேலை வங்கிகள்' போன்ற செயற்பாடுகளுக்கு அப்பால் விரிவாக - செயற்திறன் உள்ளதாக - முன்னெடுக்கப்படவேண்டும்.

வாய்க்கால்கள் புனரமைக்கப்படவில்லை;

## ஆனைக்கோட்டை, நவாலி பகுதிகளில் வெள்ள அபாயம்

நவாலி,நவ.24

கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் பெரும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

நவாலிப் பகுதியில் மக்கிக்கிடங்கடி, சங்கையான் வீதி, சின்னப்பா வீதி ஆகிய இடங்களிலுள்ள வெள்ளம் ஓடும் வாய்க்கால்கள் இந்த வருடம் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

அத்துடன் அவற்றுள் பற்றைகள் வளர்ந்துள்ளதுடன் குப்பை கூழங்கள் நிரம்பியும் உள்ளன.

இதனால் - மழை வெள்ளம் மக்களின் வீட்டு வளவுகளிலுள்ளும் வீதிகளிலும் இரண்டு அடிக்கு மேல் தேங்கி நிற்கின்றது.

இதனால் மேற்படி பகுதிகளில் வசிக்கும் நூற்றுக்கும் அதிகமான குடும்பங்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இடம்பெயர்ந்து வசிக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள் முறையிட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது.

தொடர்ந்தும் மழை பெய்யுமானால் மேலும் பல குடும்பங்கள் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்படலாமென அஞ்சப்படுகின்றது (எ-100)

நியமனம் செய்யப்பட்ட

## ஊழியர்கள் சமுகமளிக்கவில்லை; எனினும் பளை ஆஸ்பத்திரி இயங்குகிறது

தென்மராட்சி,நவ.24

பளை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 5 மணிவரை இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - மேற்படி ஆஸ்பத்திரியில் கடமையாற்றவென அழைக்கப்பட்ட மருந்தாளரும் ஐந்து சிற்றூழியர்களும் இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை என்றும் -

மூன்று சிற்றூழியர்கள் மட்டுமே தற்போது ஆஸ்பத்திரியில் கடமையாற்றி வருவதாகவும் - கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலிருந்து மருந்தாளர் ஒருவர் வந்து கடமையாற்றிச் செல்வதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த பளை ஆஸ்பத்திரி கட்டடங்களைப் புனரமைக்க வெளிநாடு ஒன்று ஒரு கோடி ரூபாவினை வழங்கியுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-117)

### நாளை

கார்த்திகை 09
திங்கட்கிழமை
(25.11.2002)
திதி : பஞ்சமி
முற்பகல் 9.25 வரை.
நட்சத்திரம்: பூசம்
முன்னிரவு 11.48 வரை.
சுபநேரம் : 12.12 - 1.42
ராகுகாலம் : 7.42 - 9.12
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

அளவுக்கு மிஞ்சிய புகழ்
வீழ்ச்சிக்கு வழி கோலும்.

## சுழிபுரம் சாத்தா ஓடை ஆலயத்தில் வெண்கல அம்மன் விக்கிரகம் திருட்டு

சண்டிலிப்பாய்,நவ.24

50 வருட கால பழைமைவாய்ந்த வெண்கலத்தில் உருவாக்கப்பட்ட அம்மன் விக்கிரகம் இரவுவேளையில் திருட்டுப்போன சம்பவம் சுழிபுரம் வடக்கிலுள்ள ஆலயமொன்றில் இடம்பெற்றுள்ளது.

சுழிபுரம் வடக்கு சாத்தாஓடை ஸ்ரீசம்புநாதேஸ்வரர் (சிவன்) ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை இரவுவேளையில் முன்கதவுப் பூட்டை உடைத்து உள்சென்ற திருடர்கள் அங்கிருந்த அம்மன் விக்கிரகத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்த விக்கிரகம் 50 வருடங்களுக்கு முன்னர் வெண்கலத்தினால் வடிவமைக்கப்பட்டது என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து சங்கானை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-135)

யாழ்.நகரப் பகுதியில்

## நடைபாதை வியாபாரம் அப்படியே தொடர்கிறது!

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்.நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரத்துக்குத் தடை விதிக்கப்பட்ட இடங்களில் தொடர்ந்தும் நடைபாதை வியாபாரம் நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியின் ஓரத்தில் மாநகரசபை நிர்வாகத்



தினால் 'நடைபாதை வியாபாரத்துக்குத் தடை' என்ற வாசகம் எழுதப்பட்ட கம்பங்கள் நடப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் அப்பகுதியில் தொடர்ந்தும் நடைபாதை வியாபாரம் நடைபெற்று வருகிறது. இதனால் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

கடந்த பல மாதங்களாக நடைபாதை வியாபாரத்தை யாழ். முனீஸ்வரன் வீதிப் பகுதிக்கு மாற்றும் நடவடிக்கையில் மாநகர சபை நிர்வாகம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றபோதும் அது இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை.

ஒவ்வொரு தடவையும் மாநகரசபை நிர்வாகம் காலக்கெடுக்களை விதித்தபோதும் வியாபாரிகள் தொடர்ந்தும் யாழ். நகரின் வீதியோரங்களில் தமது வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ஜ-10-8)


## பிள்ளைகள் குறித்து பொறுப்புடன் நடப்போம்!



'அசிங்கமாய்க் கதைத்து அழுத்தித் தொடல்கூட கூடாச்செயல் காணும் குழந்தைகட்கு'

விளம்பர அனுசரணை SC (UK)

'இவர்கள் குறித்து விழிப்புடன் இருப்போம்'

சிறுவர், சிறுமியர் மீதான பாலியல் அடாவடிகள் நீங்கள் 'நம்பிக்கைக்கு உரியவர்கள்' எனக் கருதும் உங்கள் அயலில் உள்ளவர்களாலேயே அதிகம் நிகழ்த்தப்படுகிறது!

இப்பாலியல் துஷ்பிரயோகங்களை வெறும் சம்பவங்களாக எண்ணி மறந்துவிடமுடியாது. சிறிய வயதில் ஏற்படும் இந்த அருவருக்கத்தக்க அனுபவங்கள் சிறியவர்களின் 'எதிர்கால வாழ்க்கையையும்' கணிசமான அளவு பாதிப்படையச் செய்கிறது என்கிறார்கள் உளவியலாளர்கள்.

ஆதலால்... 'இவர்கள்' குறித்து விழிப்புடன் இருப்போம்.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை.
யாழ்ப்பாணம். தொ.பே: 021-2222261 Ext.274

(சி25048)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 - 09 - 1947



மறைவு 05 - 12 - 2001

## திருமதி நடராஜா அருந்ததி

*(சந்தியா அன் கோ, யாழ்ப்பாணம்)*

திதி : 24.11.2002

பாலுடன் சேர்த்து பாசம் பகிர்ந்தாய்
அன்புடன் குழைத்து அறிவு தந்தாய்
அன்பான எம் அம்மாவே!
கார் வடிவில் வந்தானே காராளன்
கதிகலங்கித் தவிக்கின்றோம்!
கண்ணீரில் கரைகின்றோம் - அம்மா!
ஓராண்டு ஓடிவந்தது - அம்மா!
நீயோ கனவுலகில் கலந்தாயே - அம்மா!
உன் நினைவலைகள் எம்மை
தினமும் வாட்டுதே - அம்மா!
காலங்கள் ஓடினாலும் உந்தன்
நினைவுகள் மாறாதே - அம்மா!
அம்மா என்ற தலைவி
இல்லாமல் கலங்குகிறோம் - அம்மா!
அம்மா என்று இனி
யாரை அழைப்போம் அம்மா?
உந்தன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் தயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*சண்டிலிப்பாய் றோட், முல்லையடி, பண்டத்தரிப்பு.* (10889)

## மணற்காடு பகுதியில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

வடமராட்சி கிழக்கு,நவ.24

தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளின் வருகை மணற்காட்டுப் பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

மணற்காட்டில் உள்ள கடற்கரை, மணல்மேடுகள், சவுக்கு மரத்தோப்புக்கள் இவர்களை கவர்வனவாக உள்ளன. (எ-182)

## உலகவங்கி நிதி உதவி

கொழும்பு,நவ.24

யுத்தம் காரணமாகப் பாதிப்புக்குள்ளான வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திப் பணிகளுக்காக 6 கோடி 60 லட்சம் ரூபாவை (60 மில்லியன் அமெரிக்க டொலர்களை) நிதியுதவியாக வழங்குவதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது.

இந்த நிதி நீர்ப்பாசன, விவசாயத் திட்டங்கள், நிலக்கண்ணி வெடியகற்றல் உட்படப் பல புனர்வாழ்வுப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது. (ஒ)

## நீச்சற் பயிற்சியில் ஈடுபட்ட இளைஞர் வலிப்பினால் மரணம்

குளத்தில் நீச்சல் பயிற்சி பெற்ற இளைஞர் ஆழமான பகுதியில் வலிப்பு ஏற்படவே, நீரில் மூழ்கிப் பலியான சம்பவம் வரணி இடைக்குறிச்சியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த முருகன் கோகுலன் (வயது 19) என்னும் இளைஞரே இவ்வாறு மரணமானவராவார் (எ-117)

சிவமயம்

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

### திருக்கேதீச்சரத்தில் யாத்திரிகர் மடக் கட்டட நிர்மாண வேலைகளுக்கு விலை கூறல்

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை, திருக்கேதீச்சரத்தில் நிர்மாணிக்கவிருக்கும் யாத்திரிகர்மடக் கட்டடத்தைக் கட்ட அனுபவமுள்ள ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விலை கூறல்கள் கோரப்படுகின்றன. விலை கூறல் ஆவணங்களை (Tender Documants) ரூ. 2000 கட்டணமாகச் செலுத்திக் கட்டட நிபுணர் நிறுவனம் THURAIRAJAH ASSOCIATES 75 (1 Floor) WARD PLACE, COLOMBO - 7 (Phone:- 693678, Fax:- 685304) என்ற விலாசத்திலிருந்து 5.12.2002 மாலை 3மணி வரை பெறலாம். விலை கூறல்கள் 17.12.2002 மாலை 4மணிவரை சொல்லப்பட்ட கட்டட நிபுணர் நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இ.நமசிவாயம்
தலைவர்,
திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை.

*இல. 3, இராமகிருஸ்ண அவனியூ, கொழும்பு - 06* (C/25025)

# நான்காம் ஆண்டு நினைவுப் பூக்கள்

மண் மகிழ 22 - 12 - 1981



கண் நெகிழ 24 - 11 - 1998

## செல்வி செல்வரத்தினம் தர்ஷிகா

உணர்விற் கலந்து எம் உயிரில் நிறைந்து
உறவிற் திளைத்திருந்த உயரமுதே!
கணக்கில் ஆற்றல்கள் கல்விச் சிறப்பென்று
கலையிற் பொலிந்திட்ட செய்தவமே!
தணலில் வெந்தின்று தாழாத் துயர்தந்து
தங்கமே எமைநீங்கிப் போய்விட்டாயோ?
வணங்கி இறைபாதம் வடிவே நீ அமர
வாஞ்சையொடு அஞ்சலித்தோம் உனை மறவோம்!
நீங்கா நினைவமரும் எம் அன்புக் குழந்தைக்கு
நெக்குருகி அஞ்சலித்தோம்! அமைதி கொள்க!

அன்பு அம்மா, சகோதரர்கள், உறவினர்கள்.

*ஷோபிதாஸ் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால், புத்தூர்.* (10893)


# கிளீனோல்

CLENOL
க்லீனோல்

பிரசித்தி பெற்ற 'கிளீனோல்' தயாரிப்புகள்
இப்போது யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டன!

- ★ சோப், பார் சோப்.
- ★ வோஷிங் பவுடர் – அழகிய வர்ண பிளாஸ்ரிக் வாளிகளுடன்
- ★ டிஸ் வோஷ் (தூளாகவும் – திரவமாகவும்)
- ★ பைனோல் (தொற்று நீக்கி)
- ★ மலசலகூட தொற்று நீக்கிகள்
- ★ ஏயார் பிறஷ்னர் (AIR FRESHNER)
- ★ வாகன சுத்திகரிப்பு நிலையங்களுக்கான தூய்மையாக்கும் சாதனங்கள்
- ★ கொம்பியூட்டர் கிளீனர்

இன்னும் பல! இதோ உங்கள் முன்!!

வடமாகாண ஏக விநியோகஸ்தர் :

மீரா ரேடர்ஸ்

240 ஏ, ஹொரவப் பொத்தான வீதி,
வவுனியா - T.P- 024 - 23009, 23016
கிளை : நல்லூர் மார்க்கெட்.



பிராந்திய விற்பனை முகாமையாளர்
கே.இராமகிருஷ்ணன்

தயாரிப்பாளர்கள்

**TRADEX** (clenol company Pvt. Ltd)
*69, Kandy Road.*
*Mallawapitya, Kurunegala.*

(10799)


# முதலாம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்

வையகத்தில் அறிமுகம் 1979 - 02 - 19



நேர்வந்தினுள் சங்கமம் 2001 - 12 - 05

## திருச்செல்வம் அகல்யா

திதி: 24.11.2002

இந்தப் பைந்தமிழிற்கு ஏன் தான்
இத்தனை அவசரம்?
அன்பிற்கு வரலாறு எழுதியவள்!
இளமையிலே வாழ்வின் முடிவினை
முடிவு செய்தவளே!
பாழாய்ப்போன பாதகன் அவன்
இதயத்தின் நேசம் என்று வந்தானோ?
நொருங்குகின்றோம் நாங்கள் எல்லாம்
எங்கள் வாசலுக்கு வந்த விண் மேகங்கள்
எம் மடிமீது கண்ணீரை மழையாய்ச்
சொரிகின்றன!
இதயம் எல்லாம் எரிகிறது! இளங்குயிலைக்
காணவில்லை! இசைபாடும் நீள நதியே!
மேகங்கள் இருள் அப்பிப்போகின்றன!
விழிகளை இறுகமூடுகின்றோம்
ஓர் ஆண்டு சென்றதுவா? நம்பமுடியவில்லையே!
நம்பித்தான் ஆகவேண்டும்!
ஊர்கூடி அல்லவா ஓலமிட்டது!
ஓசையின்றி ஓய்ந்துபோன எங்கள்
சலனங்கள் உன் நினைவுடன்!

பாசமுள்ள:
அப்பா: திருச்செல்வம், அம்மா: கலைவாணி,
அண்ணா: அன்புமுகன், தம்பி: அமலன்.

*D-8, உருத்திரபுரம், கிளிநொச்சி.* (10699)


## சுயமாகத் தொழில் செய்யுங்கள்



வீட்டிலிருந்த குடும்ப அங்கத்தினர் ஒன்று சேர்ந்து மிகக் குறைந்த முதலீட்டில் இயந்திரம் இல்லாமல் செய்யக்கூடிய நல்ல கைத்தொழில் ஸ்கிரீன் பிரிண்டிங். இந்தத் தொழிலை கொழும்பில் பயின்று இன்று உயர்ந்த நிலையில் தொழில் செய்து வருகின்றனர்.

யாழ்நகரில் உள்ள தமிழ்மக்களுக்கும் இந்தக் கலைத் தொழிலை கற்றுக்கொடுக்க தென் தமிழகத்தில் இருந்து R.பரதன் (அச்சுக்கலை நிபுணர்) யாழ்.நகருக்கு வருகை தந்துள்ளார். இந்தத் தொழில் பற்றிய முழு விவரம், இதன் பயன் பற்றிய விளக்கம் தேவைப்படுவோர் இலவசமாக நேரில்வந்து சந்தித்த பின்பு பயிற்சியில் சேரலாம். பயிற்சி 3 நாள்கள் மட்டுமே. பயிற்சிக்கு பின்பு தொழில் தொடங்கலாம். சான்றிதழ் வழங்கப்படும். இந்தத் தொழில் செய்வதன்மூலம்,



பிளாஸ்டிக், பேனா, தகரம், துணிவகைகள், பேனர், பில்புக், நோட்டீஸ், போஸ்டர், திருமண அழைப்பிதழ் முதலியன பிரிண்டிங் செய்யலாம். இந்த அரிய வாய்ப்பை யாழ்நகர மக்கள் பயன்படுத்திக் கொள்ளவும். பயிற்சியில் வயது வரம்பு தேவையில்லை.

*நேரில் தொடர்பு முகவரி:*

**CAREER COM INSTITUTE**
79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777 706334

(10829)

# ஆயுர்வேத வைத்தியத்துறையில் சர்வதேச அந்தஸ்து பெற்றவர்!

## சித்தாலேப அதிபர் ஹெட்டிகொட உலகமயமாக்கலை எதிர்க்கவில்லை

*கேள்வி:* ஆயுர்வேத வைத்தியத் துறையில் பல சாதனைகளைப் படைத்துள்ளீர்கள். நீங்கள் கடந்துவந்த முன்னேற்றப் பாதையை சற்று விளக்கமாகக் கூறமுடியுமா?

*பதில்:* பாரிய முதலீடுகள் மூலம் வியாபாரத்தை ஆரம்பித்த பலர் உலகில் இருக்கிறார்கள். அதேபோல தந்தையிடமிருந்து மகனுக்குக் கிடைத்த வியாபாரங்களும் இருக்கின்றன. அதனைவிடத் தாமே சுயமுயற்சியால வர்த்தகத்தில் காலூன்றியவர்களும் இருக்கிறார்கள் நான் இவற்றில் இறுதி வகையைச் சேர்ந்தவன்.

நானே பொருள்களை உற்பத்தி செய்து கடைகடையாகக் கொண்டு சென்று விற்பனை செய்தவன். அது எனக்குக் கிடைத்த உறுதியான அத்திபாரம் ஒரு வீட்டைப் போலவே வியாபாரத்திலும் சரியான அத்திவாரம் இடப்படவேண்டும்.

நான் செயல்முறை மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தை ஒரு வணிகக்கல்வி நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியாது. எனது அனுபவங்கள்மூலம் போட்டிச் சந்தையை எதிர்கொள்ளும் வழிகளைக்கற்றுக் கொண்டேன்.

எனவே, சிறுகைத்தொழிலாளர்கள் எதற்கும் அஞ்சத் தேவையில்லை என்று கூறவிரும்புகிறேன். உங்களால ஆங்கிலத்தில் சரளமாகப் பேசமுடியவில்லையா? அப்படியானால் உங்களிடம் தயவுசெய்து என்னுடன் சிங்களத்தில் பேசுங்கள் என்று கேட்டு உரையாடலைத் தொடரக்கூடிய ஆத்மசக்தி இருக்கவேண்டும் மொழி காரணமாக அதிகாரிகளிடம் சென்று தமது பிரச்சினைகளை எடுத்துக்கூற முடியாது சிலர் இருக்கிறார்கள். இது தவிர்க்கப்படவேண்டும்.

வர்த்தகத்தை விருத்திசெய்ய ஆங்கில அறிவு அத்தியாவசியமானது என்று கருதுவது தவறு. வர்தகத்திற்கு சரியான முகாமைத்துவமும் அதனை வழி நடத்தக் கூடிய திறனும்தான் தேவைப்படுகிறது. எனவே, ஆங்கிலத்தைப் பார்த்து பயப்படவேண்டாம் என்று சிறு கைத்தொழிலாளர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*கேள்வி:* அரசாங்கத்தினாலும் அதிகாரிகளினாலும் உங்களுக்குக் கிடைத்த ஆதரவுகள் எவ்வாறானவை?

*பதில்:* அரசாங்கம் என்பது ஒரு நாட்டை ஆட்சிசெய்யும் நிறுவனம், ஒரு நாட்டின் சட்டதிட்டங்கள், வளங்கள், மரபுகள் என்பனவற்றை அனுசரித்து வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை அரசாங்கம் செய்துதரவேண்டும்.

உலகின் வல்லரசுகள் இணைந்து தீர்மானங்களை எடுக்கும்போது, அவை தமக்கு சாதகமாக இருப்பதையே அவர்கள் பார்ப்பார்கள். அதனைத் திருத்தி நாம் எமது நாட்டிற்குப் பொருத்தமான வகையில் மாற்றிக் கொள்ளவேண்டும். எமது நாட்டில் இந்த நடைமுறை பின்பற்றப்படாதது கவலைக்குரிய விடயமாகும்.

திறந்த பொருளாதாரத்திற்கு நான் எத்தகைய எதிர்ப்புமில்லை. நாட்டின் அபிவிருத்திக்காக என்று கூறிக் கொண்டு சில விபரீதமான சட்ட திட்டங்களை அமுல்செய்யக்கூடாது.




ரி.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் சித்தா லேப அதிபர் விக்டர் ஹெட்டிகொடவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப்பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவையும் செவ்வி காண்கிறார்கள்.

***வர்த்தக ஸ்பெஷல்***

*ரி.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 19ஆம் திகதி தோன்றித்தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார். சித்தாலேப அதிபர் விக்டர் ஹெட்டிகொட.*

*"உலக மயமாக்கலில் தவறில்லை, ஆனால், அது எமது நாட்டிற்குள் வரும்போது எமக்கு பொருத்தமானதாக இருக்கவேண்டும்."*

*- என்று ஆயுர்வேத வைத்தியர் தேசபந்து விக்டர் ஹெட்டிகொட கூறுகிறார். ஹெட்டிகொட 1971 ஆம் ஆண்டில் சித்தாலேப தைலஉற்பத்தியில் ஈடுபட்டார். அவரே ஸ்தைலத்தை உற்பத்திசெய்து பொதியிட்டு கடைகளுக்குச் சென்று விற்றும் வந்தார். இன்று ஹெட்டிகொட கூட்டு நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார்.*

*இலங்கையில் முதலாவது ஆயுர்வேத வைத்தியசாலையை ஆரம்பித்தது. ஆசியாவிலேயே சர்வதேச மட்டத்திலான ஆயுர்வேத தொழிற்சாலையை ஆரம்பித்து. ஆயுர்வேதத் துறை தொடர்பாக சி.என்.என். தொலைக்காட்சியில் முதல் முறையாகப் பேட்டியளித்தது முதலான பல பெருமைகள் விக்டர் ஹெட்டிகொடவுக்கு இருக்கின்றன. மக்கள் வங்கிப் பணிப்பாளர், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன ஆலோசகர், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையப் பணிப்பாளர் ஆகிய பதவிகளையும் இவர் வகித்திருக் கிறார். ரி.என்.எல். தொலைக்காட்சியில் விக்டர் ஹெட்டிகொடவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும் 118 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர். செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.*

உலக மயமாக்கலும் இவ்வாறானதுதான். ஆனால், அதற்கும் எனது எதிர்ப்பில்லை. ஜப்பானுக்கும் இருப்பது எமக்குள்ள அதே உலகமயமாக்கல்தான். ஆனால், ஜப்பான் தனது நாட்டை பாதுகாத்துக் கொண்டுள்ளது. இதன்மூலம் உலக மயமாக்கலும் நடைபெறும் அதேவேளை, நாட்டின் உள்நாட்டு கைத்தொழில்களும் பாதுகாக்கப்படுகின்றன.

ஆனால், எமது நாட்டில் என்ன நடக்கிறது? உலக மயமாக்கல் என்ற பெயரில் சிறு கைத்தொழில்கள் பாதிக்கப்படுகின்றன.

*கேள்வி:* ஆனால், எமது அதிகாரிகள் உலக வங்கியின் சட்டங்களை பற்றி கூறுகிறார்களே?

*பதில்:* பலமுடையவர்கள் எம்மைப் போன்ற சிறுபான்மையினர்மீது எதையும் புகுத்த முற்படலாம். நாம் கடனில் வாழும் ஒரு நாட்டவர் என்பதால் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். மூலதனத்தை வழங்கும் நிறுவனங்கள் இவ்வாறு கூறலாம். ஆனால், நாட்டையும் நாட்டின் சிறுகைத் தொழில்களையும் பாதுகாப்பதாகக் கூறும் அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வந்தபின்பு அதனை மறந்து விடுகின்றனர். மூலதன நிறுவனங்களுக்குச் சென்று கடன் கேட்கும்போது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறக்கக்கூடாது.

மூலதன நிறுவனங்களின் சட்டங்கள் எமது நாடுகளைப் பாதித்து விடக்கூடியவை என்றுகூற ஏன் தவறுகின்றனர்.

அங்கிருப்பவர்கள் முட்டாள்கள் அல்லர், அபிவிருத்தி அடைந்துவரும நாடுகளை முன்னேற்ற நினைப்பவர்கள்.

புதிய நடைமுறை ஒன்றின்மூலம் எமது தொழிலாளர்கள் வேலைவாய்ப்புக்களை இழக்கும் அபாயம் இருப்பதாகக் கூறினால், அவர்கள் ஏற்றுக் கொள்ளாமலா போவார்கள்?

இலங்கையர்கள் முட்டால்கள், அவர்கள் எதையும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நிலைமையை மாற்ற வேண்டும்.

உதாரணமாக, இந்திய - இலங்கை வர்த்தக ஒப்பந்தத்தின்படி இந்தியாவிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்யும்போது வரி அறவிடப்படுவதில்லை. ஆனால், நாம் ஏற்றுமதி செய்யும்போது அந்த அரசாங்கம் வரி அறவிடுகிறது.

*கேள்வி:* இது முற்றிலும் முரணான ஒரு ஒப்பந்தமாக இருக்கிறதே?

*பதில்:* ஆம். வரிகள் தொடர்பாக இவ்வாறான ஒரு சர்ச்சைக்குரிய விடயம் இருக்கிறது.

*கேள்வி:* உங்களது உற்பத்திகளையும் இது பாதிக்கிறதா?

*பதில்:* தேசிய ஆயுர்வேத துறையைத்தான் இது பெரிதும் பாதிக்கிறது. ஏனெனில், ஆயுர்வேதத்தைப் பொறுத்தவரையில் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. எம்மைப்போன்ற தேசிய உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்காக தேசமான்ய லலித் கொத்தலாவலைக்கு நான் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இந்த சிக்கல்களைப்பற்றி மூலதன நிறுனங்களுடன் பேசித் தீர்க்க வேண்டும். அல்லது இன்னும் ஐந்து ஆண்டுகளில் நிலைமை மிகமோசமடைந்துவிடும் .

*கேள்வி:* நீங்கள் அரசாங்கத்திடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

*பதில்:* நிறைய வேலைகளைச் செய்யக்கூடிய அறிவாளிகள் இந்த அரசாங்கத்தில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இந்த நாட்டைப் பாதுகாக்கும் முறையை அந்த அறிவாளிகள் தெரிந்திருக்கவேண்டும்.

எமது நாட்டை சிங்கப்பூராக - ஹொங்கொங்காக - ஜப்பானாக மாற்ற அழைப்பு விடுக்கிறார்கள். அது நல்ல சிந்தனை. ஆனால், அதற்கான வாய்ப்புகள் இல்லை. இதனை விடுத்து அந்த நாடுகளின் கொள்கைகளைப் பற்றி அறிந்திருக்கவேண்டும். அதற்கிணங்க செயற்படவேண்டும்.

ஜப்பானியர்கள் வெற்றிலை சாப்பிடுவதில்லை என்பதற்காக இலங்கையர்களும் வெற்றிலை சாப்பிடக் கூடாது என்று கூறுவது தவறு. மாறாக வெற்றிலை எச்சிலைக் கண்ட இடத்தில் துப்புவதை நிறுத்தவேண்டும். வெற்றிலையால் உடலுக்கு ஏற்படக் கூடிய தீமைகள் பற்றி எடுத்துக்கூறவேண்டும்.

*கேள்வி:* இறுதியாக என்ன கூற விரும்புகிறீர்கள்?

*பதில்:* எமக்குப் பாரிய அளவிலான நிலங்கள் இல்லை. அதனால் இயந்திரங்களைக் கொண்டு உழவு செய்ய முடியாது. நிலம் மட்டுமல்ல, இயந்திரத்திற்கான செலவீனங்களுக்கு ஈடுகொடுக்க முடியாது. இதனால் மீண்டும் மாடுகளைக் கொண்டு உழவு செய்யவேண்டும். அதன் மூலம் நாம் வெற்றியடையலாம்.

- இவ்வாறு கூறினார் விக்டர் ஹெட்டிகொட. (ம)

## ஜனாதிபதியின் தேசியக்குழு யோசனையை அரசுத் தலைவர்கள் தீவிரமாக ஆராய்வு

சகல கட்சிகளையும் சமய, சமூகத் தலைவர்களையும் உள்ளடக்கிய இன நல்லினக்கத்துக்கும் மற்றும் நிலையான சமாதானத்துக்குமான தேசியக்குழு அமைக்க ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க வெளியிட்டிருக்கும் யோசனையை அரசு தீவிர கவனத்தில் கொண்டிருக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த புதனன்று இரவு கூடிய அரசின் அரசியல் சபை, ஜனாதிபதியின் யோசனை குறித்து விரிவாக ஆராய்ந்திருக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின தலைமையில் தேசியக்குழு அமைக்கப்படவேண்டும் என்ற யோசனையை ஜனாதிபதி சந்திரிக்கா கடந்த 12ஆம திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வைபவத்தின்போது வெளியிட்டார் என்பது தெரிந்ததே.

ரணில் விக்கிரமசிங்க பொதுத் தேர்தலுக்கு முன், முன்வைத்த 'மோதல் அரசியலைப் புறந்தள்ளும் கலாசாரத்தை' உருவாக்கும் யோசனையுடன் ஜனாதிபதியின் யோசனை எந்தளவு பொருந்துகிறது என்பது குறித்து அரசின் அரசியல் சபைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

ஜனாதிபதியினதும் பிரதமரினதும் யோசனைகளை இணைத்து தேசியக்கொள்கை ஒன்றின்கீழ் சகல கட்சிகளும் ஐக்கியமாகச் செயற்படக்கூடிய வாய்ப்புக் குறித்து மேலும் விரிவாக ஆராய்வதென அரசின் அரசியல் சபை இணங்கியிருக்கிறது. (ஒ)

## கிராமியப் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுக்கள்

இலங்கையில் நான்கு கிராமிய பொருளாதார அபிவிருத்தி ஆணைக் குழுக்களை அமைப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இது சம்பந்தமான பிரேரணை அடுத்த மாதம் 11ஆம் திகதி நாடாளு மன்றில் சமர்ப்பிக்கப்படும்.

மாகாணமட்டத்தில் முதலீட்டு வாய்ப்புக்களுக்கு இடமளிப்பது இதன் நோக்கமாகும். பிராந்திய அடிப்படையில் கைத்தொழிற்சாலைகளை அமைப்பது தொடர்பாக தீர்மானங்களை எடுப்பது, பொறுப்புகளை ஒப்படைப்பது போன்ற பணிகள் இந்த ஆணைக்குழுவைச் சார்ந்திருக்கும்(ஒ)

## லஞ்சஊழல் ஆணைக்குழு முன்பாக ஆஜராக ரத்வத்தைக்கு உத்தரவு

கொழும்பு,நவ.24

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுரத்த ரத்வத்தை எதிர் வரும் 27ஆம் திகதி லஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு முன் ஆஜராகவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜெனரல் ரத்வத்தை தனியார் வங்கி ஒன்றில் சேமிப்பு வைப்புக்கள் வைத்திருந்தமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜெனரல் ரத்வத்தையின் சொத்து விவரங்களை நாடாளு மன்றம், வருமான வரித்துறை, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றிடம் இருந்து பெற்றுக் கொள்ளவிருப்பதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்தது. (ஒ-4)

## மயிலந்தனைப் படுகொலைத் தீர்ப்பு!

மயிலந்தனைப் படுகொலைகள் தொடர்பான வழக்கின் தீர்ப்பு நாளை அறிவிக்கப்படவுள்ளது.

35 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட இந்த வழக்கில் சந்தேக நபர்களான 18 இராணுவத்தினர் தொடர்பாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

1992ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி மயிலந்தனைக் கிராமத்தில் 14 குழந்தைகள் உட்பட 35 பேர் படுகொலை செய்யப்பட் தொடர்பாகவே இந்த வழக்கு பெறுகிறது.

# ஓராண்டு நினைவுப் பிரார்த்தனை

மகிழ 16 - 11 - 1934



நெகிழ 04 - 12 - 2001

## அமரர் இ.சந்திரமௌலீசன்

*(ஓய்வுபெற்ற முதன்மை எழுதுநர் நகரசபை அலுவலகம், சாவகச்சேரி)*

வருஷாப்திகம்
கார்த்திகை மாத அபரபக்கப் பஞ்சமி

நீத்துவிட்டாய் என்ற சொல் நெஞ்சில்
நிலைக்கவில்லை
பார்த்திருந்த விழிகளுக்குப் பகலிரவாய்
உறக்கமில்லை
சேர்த்து விட்டுச் சென்றாய் நினது கடன் முடித்தாய்
காத்திருப்போம் மீண்டும் கருத்தரித்து வந்திடையா!

*சரசாலை தெற்கு,*
*நீர்வேலி மத்தி,*
*நீர்வேலி.*

நீங்காத நினைவுகளுடன்:
**மனைவி, மகன், மருமகள்.**

(சி-25051)

## உபசாரவிழா

வலிகாமம் தெற்கு,நவ.24

ஆஸ்திரேலியா நாட்டு திருமணப பதிவாளரும், சர்வதேச இந்துமத குருபீட ஆஸ்திரேலிய பிரதிநிதியும், சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை தேவஸ்தான பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ நா.சோமஸ் கந்த குருக்களின் மணிவிழா தொடா பான வரவேற்பு உபசாரவிழா இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு நல்லூர் சிவன்கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஆதரவில் அதன் தலைவர் சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் தலைமையில் இந்த விழா நடைபெறும். (எ-152)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,நவ.24

உரும்பிராய் லயன்ஸ் கழகமும் விரைவில் அங்குரார்ப்பணம் செய்யப் படவுள்ள அச்சுவேலி வட்ட லயன்ஸ கழகமும் இணைந்து ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்க அனுசரணையுடன் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று காலை 9.30 மணிக்கு ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் நீரிழிவு மற்றும் கண் பரிசோதனை என் பன மேற்கொள்ளப்படவுள்ளதுடன், இலவச கண்ணாடியும் வழங்கப்பட வுள்ளது. (எ-10)

## தாதி தேவை

வைத்தியசாலையில் கடமை புரிவதற்கு பெண் தாதி தேவை. உடன் சந்திக்கவும்.

**ஜனனி மருந்தகம்**
ஆனைக்கோட்டைச் சந்தி

(10917)

குடாநாட்டில்

# மப்பும் மந்தாரமும் இன்றும் தொடரும்

யாழ்ப்பாணம்,நவ.24

குடாநாட்டின் வடகிழக்குத் திசையில் 500 கிலோமீற்றர் தொலைவில் உருவாகியிருக்கும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடமேற்குத் திசையாக நகர்ந்து வருவதாக யாழ்.வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்திருக் கிறது.

இதனால் தற்போது நிலவும் மப்பும் மந்தாரமுமான காலநிலை இன்றும் தொடர்ந்து காணப்படும் என்றும் -

ஓரளவு பலமான காற்று வீசக் கூடும் என்பதால் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்களை எச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறும் -

யாழ்.வானிலை ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி வீ.புஸ்பநாதன் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# இலங்கை ~ அமெரிக்கா புதிய ஒப்பந்தம் கைச்சாத்து

சர்வதேச குற்றவியல் நீதிமன்றிடம் சந்தேகநபர்களைக் கையளிப்பது தொடர்பாக இலங்கையும் அமெரிக்காவும் ஒப்பந்தம் ஒன்றைச்செய்து கொண் டன.

இலங்கையின் சார்பாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும், அமெரிக்காவின் சார்பாக இலங் கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸும் இந்த ஒப்பந்தத் தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி இலங்கையில் உள்ள அமெரிக்கர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிடம் கையளிப்பதோ அல்லது அவர்களை நாடு கடத்துவதோ தடை செய்யப்படுகிறது.

இதேபோல் அமெரிக்காவில் உள்ள இலங்கையர்களை குற்றவியல் நீதி மன்றத்திடம் கையளிப்பதும் நாடு கடத்தப்படுவதும் தடை செய்யப்படு கிறது.

எனினும் இரு தரப்பினரும் தமது பிரஜைகள் சர்வதேச குற்றவியல் நீதி மன்றில் ஒப்படைப்பதற்கான விருப் பத்தை வெளியிடும் பட்சத்தில் இந்த விதிகள் பொருந்தமாட்டா. (ஒ)

திருமலைக் கடற்பரப்பில்

# கைதான 6 புலிகளும் மேன்முறையீட்டு மனு

திருகோணமலை,நவ.24

திருகோணமலைக் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் 6 பேரும் தம்மை விடுவிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றினைத் தாக் கல் செய்துள்ளனர்.

திருகோணமலைக் கடற்படை முகாமுக்கு அருகே கிளைமோர் குண்டு ஒன்று புதைத்து வைக்கப்பட்டி ருந்ததாகவும் - அதனைச் செயலிழக்க வைத்து எடுத்துச் செல்வதற்காகவே தாம் அங்கு சென்றதாகவும் -

அவர்கள் தமது மனுவில் குறிப் பிட்டுள்ளார்கள். (ஓ-4)


## KOBE® 52 அன்டனா & பூஸ்டர்

திருப்பிடக்காதது எத்திசையிலும் இயங்கக்கூடியது

**VHF/UHF** தொலைக்காட்சிக்கும்
**FM** வானொலிக்கும்
உள்ளிணைப்புடன் கச்சிதமான
வெளிக்கள அன்ரனா

- ☑ நல்ல தொழில்நுட்பத்துடன் நேர்த்தியான வடிவமைப்பு
- ☑ தண்ணீர் உட்புகாத முழுமையான கவசத்தினாலானது
- ☑ மின்சாரத்திலும், பற்றரியிலும் இயங்கக்கூடியது
- ☑ நம்பகமான உயர் தொழில்நுட்ப பூஸ்டர்களுடன் இணைக்கப்பட்ட KOBE அன்டனா.

தற்பொழுது யாழ். மாவட்டத்தில் அனைத்து நிப்போன் முகவர்களிடமும்




லங்கா நிப்போன்
18, கெய்சர் வீதி, கொழும்பு-11.
தொ.பே: 437736, 324726, 335301
தொ.ந: 437736

காட்சியறை
10, ரேஸ்கோர்ஸ் ஒழுங்கை, பம்பலப்பிட்டி
கொழும்பு-04.
தொ.பேசி: 589992, 582365

❖ யாழ். மாவட்டத்திற்கென்று பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

## அன்னலட்சுமி சின்னராசா

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, இணுவில் தெற்கு)*

அன்னை மடியில் 10-09-1929

ஆண்டவன் அழைப்பில் 26.10.2002

அன்பின் திருவுருவாக, பண்பின் சிகரமாக, குடும்பத்தின் குலவிளக்காக, பார்வையிலே பரிவும், பாசமும் காட்டி எங்களை மாண்புடன் வாழ வைத்த எமது தாயார் சிவபதமடைந்து (25.11.2002) 31ஆம் நாள் நிறைவடைகிறது. அம்மாவின் மரணச் செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும், இரங்கல் உரை நிகழ்த்தியோர்க்கும் செய்தித்தாள்களின் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலிருந்தும் தபால், தந்தி, தொலைபேசிமூலமாக ஆறுதல் வார்த்தைகள் கூறியோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (25.11.2002) திங்கட்கிழமை இல.75, லோரன்ஸ் வீதி, கொழும்பு-4 இல் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*65/2, கம்டன் லேன்,*
*கொழும்பு - 06.*
*074-511377*

(10910)

**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீவெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ்வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம்மூலம் தீர்வுகாணலாம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்:

**மணி சாமி**
**யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி**
*இல.54, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்* (வெலிங்டன் சந்தி அருகில்)
பார்வையிடும் நேரம்: **காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை**
(வியாழக்கிழமைகளில் விடுமுறை)

(10919)

# மரண அறிவித்தல்கள்

## தம்பாபிள்ளை வன்னியசிங்கம்

(Retired Mechanical Suptd., Paper Factory, Valaichchenai)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாபிள்ளை வன்னியசிங்கம் அவர்கள் கனடாவில் 2002.11.22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் தம்பதிகளின் அருமை மருமகனும் மகேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை, யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.) அன்புக் கணவரும் சிற்றானி (ஆஸ்திரேலியா), பிரபாகரன் (கனடா), சுரேந்திரனி (கனடா), சுதாகரன் (கனடா), தயாளினி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் சரவணபவானந்தன், சிவயோகநாதன், கிரிதரன், வரதா, சித்தார்த்தனி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.11.2002) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*
*தற்காலிகமுகவரி:*
*இணுவில் மேற்கு, இணுவில்.*

தகவல்:
சி.பத்மநாதன்
(மைத்துனர்)

(10916)

## திருமதி கதிரவேலு பிலிப்பம்மா

(பிள்ளையம்மா)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் நல்லூர், கொண்டலடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு பிலிப்பம்மா (பிள்ளையம்மா) 22.11.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜோன் கதிரவேலு அவர்களின் அன்பு மனைவியும் சிந்தாத்துரை, தேவராசா (சுவிஸ்), யோன் யோகராசா (பிரதேச சபை, நல்லூர்), சகாயராணி, மேரிராணி, புஸ்பராணி ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற இராசாத்தி மற்றும் காஞ்சனா, தவமணி, காசிநாதன், தவராசா, மரியதாஷ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொட்டடி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.45, கொண்டலடி வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(10913)

தகவல்:
சி.கதிரவேலு
(கணவர்)

# பாலசிங்கத்தை மட்டுமல்ல, கருணாவையும் ஒஸ்லோவுக்கு அழைத்துச் செல்லவேண்டும்!

## அமைச்சர் ராஜித சேனாரத்ன

நாட்டில் கைத்தொழில் அபிவிருத்தியில் எப்படி மந்தநிலை ஏற்பட்டுள்ளதோ அப்படியே கைத்தொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதமும் அமைந்திருந்தது.

சபையில் உறுப்பினர்களைக் காணமுடியவில்லை. 90 சதவீதமான ஆசனங்கள் காலியாகவே இருந்தன.

இருந்த சில உறுப்பினர்களும் தாம் குழுக்களாகக் கூடிப் பேசிக் கொண்டிருந்தனரேயன்றி உரைகளை அவதானித்துக் கேட்டதாகத் தெரியவில்லை.

குழுநிலை விவாதம் என்பதால் அவர்களுக்குள் குழுக்களை அமைத்துப் பேசுகின்றனரோ என்றும் சிந்திக்க வைத்தது.

நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் சபை கூடியது.

வழமையான கேள்வி - பதிலுடன சபை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

கைத்தொழில் அமைச்சுக்கான குழுநிலை விவாதம் முதலாவதாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

### சாடலும் சாட்டையடியும்

ஆரம்பம் முதலே தொழிற்சாலைகள் மூடப்பட்டதாகவும், முறையான கைத்தொழில் திட்டம் இல்லை, கொள்கையும இல்லை என்று கூறிய எதிரணியினர், வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது என்றும் குற்றஞ்சாட்டினர்.

ஆனால், இதற்கெல்லாம் காரணமானவர்கள் யார் என்பதை மறந்துவிட்டுப்பேசுகின்றார்கள் எதிர்க்கட்சியினர். தொடரான வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள், தொழிற்சாலைக்கள் எரிப்பு எனக் கைத்தொழிலுக்கு ஆப்பு வைத்தவர்களே ஜே.வி.பியினர் தான். இதை மறந்துவிட்டு இப்போது கைத்தொழில் மீது பாசம் காட்டுகின்றனர் என ஆளும் தரப்பினர் சாட்டை அடிகளைக் கொடுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### எஸ்.பி.நாவின்ன

கைத்தொழில் அமைச்சுக்கான விவாதத்தை எதிரணியின் சார்பில் குருநாகல் மாவட்டப் பொது ஜன ஐக்கிய முன்னணி உறுப்பினரான எஸ்.பி.நாவின்ன ஆரம்பித்தார்.

ஆரமபத்திலேயே ஒரு கேள்வியை எழுப்பி சபையினரை குழப்பியடித்தார். கைத்தொழில் அமைச்சுக்கு யார் அமைச்சர். ரோஹித போகொல்லாகமவா? அல்லது பேராசிரியர் பீரிஸா? என்பது தெரியவில்லை. கைத்தொழில் ஒருவரிடம், கைத்தொழில் அபிவிருத்தியும் ஆலோசனையும் மற்றவரிடம். இப்படி இரண்டுங்கெட்டான் நிலையில் இருந்துகொண்டு எப்படி கைத்தொழிலை ஊக்குவிக்கப்போகின்றீர்கள்?

நீங்கள் அரிசியை உற்பத்தி செய்வோம், தென்னை அபிவிருத்தியை ஊக்குவிப்போம் என்கின்றீர்கள். ஆனால், வர்த்தக அமைச்சர் அரிசியையும் தேங்காயையும் இறக்குமதி செய்கின்றார். இந்தநிலையில் எப்படி உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கப் போகின்றீர்கள் என்று கேட்டார்.

### அமைச்சர் அஸ்வர்

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அஸ்வர், எங்களுடைய காலத்தில் இரண்டு அமைச்சர்கள். ஆனால், உங்களுடைய ஆட்சியில் ஒன்பது பிரதி அமைச்சர்கள் இருந்தனர் என்றார்.

அதுசரி, அங்கே ஒன்பது பிரதி அமைச்சர்கள் இருந்தாலும் அமைச்சர் ஒருவர்தான் என்றார் பேசிக் கொண்டிருந்த உறுப்பினர் நாவின்ன.

அப்போது அமைச்சர் அஸ்வர் ஏதோ கூற முயன்றபோது, சபாநாயகர் குறுக்கிட்டு இதற்கு அமைச்சர் பதில் அளிப்பார். திருநாவின்ன எம்.பி. அங்கே பார்த்துப் பேசாமல் என்னைப் (தலைமை ஆசனத்தை) பார்த்துப் பேசினால் இடையூறு ஏற்படாது - என்றார்.

### சிரிப்பு

நன்றி ஐயா! நான் கைத்தொழில் அமைச்சரைப் பார்த்துத்தான் பேசினேன் என்றார் நாவின்ன எம்.பி. நீங்கள் அமைச்சரைப் பார்க்கும்போது பின்பக்கமும் தெரிகிறது அல்லவா? (பின் பக்கம் அமைச்சர் அஸ்வர் இருந்தார்) அதுதான் பிரச்சினை என்றார் சபாநாயகர். அமைச்சர் அஸ்வர்



உட்பட சபையில் அனைவரும் சிரித்துவிட்டனர்.

### சிறிசேன

தொடர்ந்து ஆளுங்கட்சியைச் சேர்ந்த இரத்தினபுரி மாவட்ட எம்.பியான மஹிந்தரத்ன திலக்க, சமுர்த்தி அமைச்சர் ஆர்.ஏ.டி.சிறிசேன ஆகியோர் பேசினர்.

அன்று தேயிலைத் தொழிற்சாலைகளையும், சதொச நிறுவனங்களையும், தொலைபேசி நிலையங்களையும், ரயில்களையும், பஸ்களையும் தீ வைத்து எரித்து நாசப்படுத்திய ஜே.வி.பியினர், இப்போது தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன என்று நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர் என்று ஜே.வி.பியினரின் கடந்தகால வரலாற்றை புட்டுவைத்தனர்.

சபையில் சில ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருந்தும் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

இறுதியாக அமைச்சர் ஆர்.ஏ.டி. சிறிசேன, ரத்மலானை 'பாட்டா' தொழிற்சாலை ஆர்ப்பாட்டம் பற்றிக் கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜே.வி.பி. உறுப்பினர் காமினி ரத்னாயக்கா, அமைச்சர் ஆர்.ஏ.டி.சிறிசேன எங்களுடைய இயக்கத்தை வம்புக்கு இழுக்கின்றார். இதனைத் தவிர்க்கவேண்டும் என்றார்.

ஆனாலும், இதை மறுத்த அமைச்சர், நான் தொப்பியை தைத்துவைத்தேன். அதைப் பொருத்தமானவர் போட்டுக்கொண்டால் அதற்கு நாம் பலியல்ல என்றார் அமைச்சர் ஆர். ஏ.டி.சிறிசேன.

### காமினி ரத்னாயக்கா

தொடர்ந்து ஜே.வி.பி. உறுப்பினரான காமினி ரத்னாயக்கா, அமைச்சரின் கைத்தொழில் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்தார். அரசு பொறுப்பேற்று ஒன்பது மாதங்களில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. பல ஆயிரம் ஊழியர்கள் நடுத்தெருவுக்கு விரட்டப்பட்டனர் என்றார்.

இதற்கு உடனடியாகப் பதிலடி கொடுத்தார் அமைச்சர் கோபொல்லாகம. எங்களுடைய ஆட்சியில் எந்தத் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்படவும் இல்லை; மூடப்படவுமில்லை - என்றார்.

முற்பகலில் தூங்கி வழிந்த சபை பகல் உணவின் பின் உற்சாகமாக இருந்தது; கூச்சலும் குழப்பமுமாக இருந்தது.

விவாதத்தில் பேசிய எதிரணி உறுப்பினர்கள் அனைவருமே அரசியல் அமைப்பை மட்டும் பற்றிப் பிடித்துக்கொண்டனர். கைத்தொழில் கொள்கை, முதலீடு என்பனவற்றைப் பற்றி மறந்துவிட்டார்கள் போலப் பேசினர்.

### தினேஷ் குணவர்த்தன

விவாதத்தை ஆரம்பித்துப் பேசிய மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரான தினேஷ் குணவர்த்தன, ஒஸ்லோ மாநாட்டைப் பற்றியும் இம் மாநாட்டில் இலங்கை அரச பிரதிநிதிகளுடன் அன்ரன் பாலசிங்கம் இடம் பெறுவது எப்படி என்றும் கேட்டார். தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்தின் பிரதிநிதியை எப்படி இந்த மாநாட்டில் இடம்பெற வைப்பது?

உங்களுடைய அரசியல் அமைப்பில் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ள நாட்டின் இறைமையையே புலிகளுக்கு அடகுவைத்துவிட்டீர்கள் எனக் குற்றஞ்சுமத்தினார் தினேஷ் குணவர்த்தன எம்.பி.

இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் உரையாற்றும்போது அரசுக்கு சவால் விடுவதுபோலவே பேசினார்.

நாம் பயந்துகொண்டு பேச்சுக்கு வரவில்லை. ஆட்பலமும் படைப்பலமும் இருந்தும் நிரந்தர சமாதானம் வேண்டியே பேச்சுக்கு வந்துள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

### ராஜித சேனாரத்ன

காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன பேசும்போது, நாம் எப்படிக் குட்டிக்கரணம் போட்டாலும் புலிகள் நிராகரித்துவிட்டால் பாரிய அனர்த்தம் ஏற்படும். அன்று விஜயகுமாரதுங்கவும் ஒஸி சகோதரரும், நானும் யாழ்ப்பாணம் சென்றபோது எங்களை புலிகளின் அடிவருடிகள் என்றார்கள்.

ஜனாதிபதியும் சும்மா இருக்கவில்லை. புலிகளின் தடையை நீக்கி, வடக்கு - கிழக்கை பத்து வருடங்களுக்குப் பிரபாகரனிடம் ஒப்படைக்க தயார் என்று கூறினார். ஆனால், இன்று பொதுஜன ஐக்கிய முன்னணி கூச்சல் போடுவது வேடிக்கையானது. அன்று நாடாளுமன்றத்துக்கு குண்டு வைத்தவர் இன்று நாடாளுமன்ற இறைமை பற்றிப் பேசுகின்றார். இன்று தேவை சமாதானம். இதில் மிகவும் நிதானமாக நடக்கவேண்டும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன எச்சரிக்கை விடுத்தார்.

### புத்திரசிகாமணி

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நுவரெலியா மாவட்ட எம்.பி. புத்திரசிகாமணி பேசும் போது, சமாதான முயற்சிகளை ஜனாதிபதியே ஆரம்பித்தார். அவரோடு இணைந்து செயற்பட வேண்டும். தமது கட்சி சமாதானப் பேச்சுக்கு இடையூறு விளைவிக்க இடமளிக்கமாட்டேன் என்றும் கூறினார்.

### அமைச்சர் பீரிஸ்

விவாதத்துக்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர் பீரிஸ், முன்னைய அரசின் போது வடக்கு - தெற்கு பிரிக்கப்பட்டிருந்தன. ஆனால், இன்று நாம் இணைந்துவிட்டோம். முன்னுதாரணமாக அண்மையில் களுத்துறையில் இடம்பெற்ற சமாதான விளையாட்டு விழாவை சுட்டிக்காட்டினார். யாழ்ப்பாண இளைஞர்கள் பெரும் மகிழ்ச்சியுடன் வந்துசென்றனர்.

இந்த நிலைமை நிரந்தரமாக அமைய வேண்டும். இதற்காக நாம் எந்தவிதமான தியாகத்தையும் செய்யத் தயார். எனவே, எந்த விமர்சனத்தையும் நாம் பொருட்படுத்தத் தயாராக இல்லை.

சமாதானப் பணிகள் தொடரும்




என்று சூளுரைத்துத் தனது பேச்சை முடித்தார் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்.

அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலையில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

சபை ஒத்திவைப்பு வேளையின் போது ஜே.வி.பி. உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, ஒஸ்லோ மாநாட்டிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை அரசு அழைத்துச் செல்வது முறையாகுமா? நாட்டைப் பிரித்து புலிகளுக்குக் கொடுத்துவிட்டீர்களா? தடைசெய்யப்பட்டுள்ள புலிகள் இயக்கத்திற்கு சர்வதேச அங்கீகாரம் பெற்றுக்கொடுக்க அரசு முயல்கின்றதா? என்று கேள்வி எழுப்பினார்.

### கேள்விக்குப் பதில்

பதிலளித்துப் பேசனார் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன. புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்று கூறும் ஜே.வி.பி., இந்த நாடாளுமன்றத்திற்கு வரும்போது ஆயுதங்களை எங்கே வைத்துவிட்டு வந்தனர். ஒஸ்லோ மாநாட்டுக்கு மட்டுமல்ல, இந்தநடாளுமன்றத்திற்கு புலிகள் வரவேண்டும் முன்பு இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் எல்லாம் புலிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இலங்கைக்கு உதவிவழங்க வேண்டாம் என்று பிரசாரம் செய்தனர்.

ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது. புலிகள் நம்முடன் வந்து இலங்கைக்கு உதவி வழங்கவேண்டும் என்று கூறுவது வரவேற்கத்தக்கது.

மற்றும் ஓர் உதவிவழங்கும் மாநாட்டில் மேலும் பலகோடிகள் கிடைக்குமானால் அன்ரன் பாலசிங்கம் மட்டுமல்ல, கருணாவையும் அழைத்துச் செல்லவேண்டும் என்றார் அமைச்சர் சேனாரத்ன.

இவற்றையெல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அமைச்சர் பீரிஸ், ஜே.வி.பியினர் கூறுவது போல புலிகள் அரசின் பிரதிநிதிகளாக செல்லவில்லை. தனிக்குழுவாகவே செல்கின்றார்கள். இவர்கள் கூறுவதில் எந்தவித உண்மையும் இல்லை என்று நிராகரித்தார். (எ)

# சமாதானத்தை விரும்பும் தமிழ் மக்கள் வேண்டுமா? ஆயுதங்களுடன் வாழும் ஈ.பி.டி.பியினர் வேண்டுமா?

## சபையில் மகேஸ்வரன் எம்.பி. கேள்வி

சமாதானத்தை விரும்பும் தமிழ் மக்கள் வேண்டுமா? இல்லை, ஆயுதங்களுடன் வாழும் ஈ.பி.டி.பியினர் வேண்டுமா? இதை அரசு உடனடியாகத் தீர்மானிக்க வேண்டும் என பகிரங்கமாக கோரிக்கை ஒன்றை விடுத்தா இந்துசமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன்.

அரசியல் விவகாரம், கைத்தொழில கொள்கை, அபிவிருத்தி அமைச்சுகளுக்கான குழுநிலை விவாதத்தில் பேசும்போதே அமைச்சர் மகேஸ்வரன் இப்படிக் கூறினார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் தெரிவித்ததாவது:-

மாறிமாறி வந்த அரசுக்கள் தமிழ மக்களை அடக்கியும் ஒடுக்கியும் ஆண்டு வந்தன. இந்த நிலைமை மாறவேண்டும் என்பதே எமது போராட்டம்.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக ஆயுதப் போராட்டம் நடத்திய ஜே.வி.பியினர் கொலை செய்தனர்; கொள்ளை அடித்தனர்.

அரசியல்வாதிகளையும் புத்திஜீவிகளையும் கொன்று குவித்து கொலைக கலாசாரத்தை அறிமுகப்படுத்தினர். ஆனால், நாம் தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகவே ஆயுதம ஏந்திப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

இப்போது எம்மிடம் பணபலம், ஆட்பலம், ஆயுதபலம் எல்லாம் உண்டு. ஆனாலும், நாட்டில் நிரந்தர சமாதானம் தேவை என்பதனாலேயே இன்று



பேச்சுக்களுக்கு வந்துள்ளோம். இதை அரசும் ஏனைய அரசியல் கட்சிகளும உணர வேண்டும்.

இப்பொழுது வாக்கு மோசடி செய்து பதவிக்கு வந்த ஈ.பி.டி.பியினர் படையினரின் சீருடையில் பயங்கர ஆயுதங்களுடன் நெடுந்தீவில் நிலைகொண்டுள்ளனர். இது இப்பிரதேசம் எங்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. ஆயுதபாணிகளான ஈ.பி.டி.பியினரை நெடுந்தீவில் இருந்து வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழியில் அரசியல் நடத்த ஈ.பி.டி.பியினர் அங்கு வந்தால் நாம் ஒருபோதும் எதிர்க்கமாட்டோம். நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம்.

இந்நிலையில் சமாதானம் விரும்பும் மக்கள் தேவையா? இல்லை, ஈ.பி.டி.பி.தேவையா? என்பதை அரசு தீர்மானிக்கவேண்டும்.

கைத்தொழில் அபிவிருத்தி, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சுத்த சூனியமாகவே இருக்கின்றது. கடந்த 20 வருடங்களாக காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை உட்பட அரசுக்குச் சொந்தமான பல தொழிற்சாலைகளும் தனியார் நிறுவனங்களும் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன. பொருளாதாரம் அழித்து ஒழிக்கப்பட்டது.

இதே நிலைமை தென்பகுதியில் இடம்பெற்றிருந்தால் உடனடியாக நிவாரணம் வழங்கப்பட்டிருக்கும்.

ஆனால், வடக்கு - கிழக்கில் அழிக்கப்பட்ட அவை அனைத்தும் அப்படியே கைவிடப்பட்ட நிலையில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. உடனடியாக அவற்றை மறுசீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு அவசியம் என ஜனாதிபதியே நேர்வே அரசை இங்கு அழைத்தார். அதேபோன்று ஜே.வி.பியின் உண்மையான தலைவர் ரோஹண விஜயவீர தமிழர்களுக்கு சுயநிர்ணயமும் சுய ஆட்சியும் வழங்கப்பட வேண்டும் என்று வெளிப்படையாகவே கூறினார்.

ஆனால், இன்றுள்ளவர்கள் சமாதானம் என்ற பேச்சைக் கேட்டவுடன் காததூரம் ஓடுகின்றனர். தமது கொள்கையை மாற்றி சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார் அமைச்சர் மகேஸ்வரன்.

# மாணவர்களின் ஆளுமை விருத்தியை சிறுவயதிலிருந்து வளர்ப்பது எப்படி?

சாதாரண பேச்சுவாக்கில் "இவர் ஓர் ஆளுமையான மனிதராகத் தென்படுகிறார்" என்று கதைப்பது வழமை. இந்த ஆளுமையை ஆங்கிலத்தில் Personality எனக் கூறலாம். சாதாரணமாக Personality என்று கூறும் போது ஒருவரின் நடை, உடை, பாவனையைக் குறிப்பதாக பலர் கருதுகிறார்கள். இது தவறு. ஆளுமையுடைய ஒருவருக்கு அந்த ஆளுமையை வழங்கிய அல்லது அந்த ஆளுமைக்குப் பொறுப்பான பல பண்புகளை நாம் மறந்துவிடுகிறோம். ஆளுமையை வளர்ப்பதற்கு ஒரு மனிதனுக்கு இருக்கவேண்டிய சகல நற்பண்புகளும் அவரிடம் அமைதல் அவசியம். அத்துடன் பின்வரும் முக்கிய பண்புகளை அவர் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

☆ Initiativeness:- தைரியமான ஒரு காரியத்தை ஆரம்பித்து நடத்தக்கூடிய இயல்பு.

☆ Loyality:- நம்பிக்கைக்கு பொறுப் பானவராக இருத்தல்.

☆ Courage and Commitment:- துணிவுடன் தான் பொறுப்பேற்ற விடயத்தைச் சிரத்தையுடன் நடத்தி முடிக்கும் பண்பு.

☆ Accountability:- தான் செய்து முடித்த காரியத்தின் விளைவுகளுக்குப் பொறுப்பாகவிருக்கும் பண்பு.

☆ Responsibility:- தான் பொறுப்பெடுத்த வேலையை பொறுப்புணர்ச்சியோடு செயலாற்றுதல்.

மேலே இனங்காணப்பட்ட சகல பண்புகளும் அடங்கிய சிறப்பான ஆளுமையுடைய பல கல்வி அதிபர்களை, அரச ஊழியர்களை, திணைக்களத் தலைவர்களை நாம் அடிக்கடி நினைவு கூர்வதும் அவர்களைப் பற்றியும் அவர்களின் செயல்திறன் பற்றியும் கதைப்பதும் வழக்கமான ஒரு செயலாகும். இப்படி நினைவுகூர்ந்து கதைக்கும்போது தற்பொழுது இத்தகைய ஆளுமையுடையவர்களை நாம் மிகக்குறைவாகவே காண்கிறோம் என்பதும் ஒரு பொதுவான அபிப்பிராயம். இன்றைய இளைய சந்ததியினர் சிறப்பான தொழில்வாய்ப்புகளைப் பெறுவதற்கு இத்தகைய ஓர் ஆளுமை வளர்ச்சி மிக முக்கியமானதாகும். எதிர்காலத்தில் சகல வேலைவாய்ப்புகளும் தனியார்துறையினை மாறி வருவதை அவதானிக்கலாம். அரச நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெறும் சந்தர்ப்பம் அருகி வருகிறது.

## சில அவதானிப்புகளும் ஆலோசனைகளும்....

பெரும்பாலான அரச நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார அபிவிருத்திப் பாதையில் இது தவிர்க்க முடியாததாகவும் அமைகிறது. தனியார் நிறுவனங்கள் (Private Sectors) சிறந்த சேவையுடன் கூடிய அதிக இலாபத்தை நோக்கமாகக் கொண்டவை. இத்துறையில் வேலை வழங்கும்போது அவர்கள் ஆளுமை உடையவர்களாக இருக்க வேண்டுமென தனியார்துறை நிர்வாகிகள் எதிர்பார்க்கிறார்கள். எனவே பல்கலைக்கழகக் கல்வியை முடித்து எமக்கும்கூட வேலை கிடைக்கவில்லையே என ஏக்கத்துடன் செல்லும் இளைஞர்கள் தாங்கள் ஒரு சிறப்பான தொழிலைப் பெறுவதற்கு ஏற்ற ஆளுமையுடையவர்களாக தங்களை மாற்றியுள்ளார்களாக என்பதே முக்கிய கேள்வியாகும்.

தற்போதைய பல்கலைக்கழகக் கல்வியில் வேலை பெறக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அப்படியாயின் இந்த ஆளுமை விருத்தியைப் பல்கலைக்கழகத்திற்கு வந்த பின்பு பல்கலைக்கழகக் கல்வியூடாக வழங்கமுடியுமா அன்றேல் இவை சிறுபராயத்தில் இருந்து வளர்த்தெடுக்கப்பட வேண்டியதா என்ற கேள்வி எழுகிறது. ஆளுமை விருத்தியை சிறுபராயத்தில் இருந்து வளர்த்தெடுப்பதுதான் சரியான அணுகுமுறை. இதற்கு பெற்றோரும், கல்வி நிலையங்களும், சூழலும் சிறப்பாக பங்காற்றமுடியும். பெற்றோர்கள் தம் பிள்ளைகளை பல துறைகளிலும் ஈடுபடச் செய்தல் அவசியம். விளையாட்டு, சமய நிகழ்வுகள், சங்கீதம் போன்ற துறைகளிலும் சமூக சேவையிலும் அவர்களை ஈடுபடுத்தவேண்டும். அத்துடன் சிறப்பான ஆங்கிலக் கல்வியை அவர்களுக்கு சிறுவயதிலிருந்தே கற்பிக்க ஏற்பாடு செய்தல் அவசியம். இதைவிட கணனி அறிவையும் அவர்களுக்கு இளமையிலேயே புகட்டுதல் மிகமிக அவசியமாகும். இவற்றை ஏற்பாடு செய்வதால் பிள்ளைகளின் தன்னம்பிக்கை வளர்வதற்கு இடம் ஏற்படுகிறது. பாடவிதானத்திற்கு அப்பால் பொது அறிவு மற்றும் உலக விடயங்களை அறியும் அளவிற்கு பிள்ளைகளின் புத்தக வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து அதற்கு வழிவகை செய்துகொடுக்க வேண்டும். இவற்றைவிட பெற்றோர்கள் பிள்ளைகளுடன் கூடிய நேரம் செலவுசெய்து அவர்களின் பிரச்சினைகளுக்கு வழி காணவேண்டும். பெற்றோர் என்ற ஸ்தானத்தில் மட்டும் இருக்காது ஒரு நல்ல சகபாடியாகவும் (Companion) நண்பனாகவும் (Friend) ஏற்பாட்டாளராகவும் (Facilitator) ஆலோசனை வழங்குபவராகவும் (Advisor) தன்னம்பிக்கை ஊட்டுபவராயும் தேவையைப் பொறுத்து அந்தந்த வேளையில் இத்தகைய கடமையைச் செய்யவேண்டும். இப்படிப் பெற்றோர்கள் தொழிற்படும் போது தமது பிள்ளைகளைப் பற்றி அவர்கள் சரியான கணிப்பீட்டை செய்யவும் அவர்கள் பிரச்சினைகளை இனங்காணவும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அத்துடன் பிள்ளைகளும் பெற்றோருடன் மனம் விட்டு பேசி தமது குறைகளையும், பிரச்சினைகளையும் பகிர்ந்து கொள்ள விருப்பத்துடன் முன்வருவார்கள். மேலும் பிள்ளைகளை பல வகையான கல்விசார் கருத்தரங்குகள், ஆராய்ச்சி மாநாடுகள், தொழில்பொழிவுகளுக்கு அழைத்துச் சென்று அவற்றை அவதானித்தல், பல இடங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று பலருடன் கலந்துரையாடும் சந்தர்ப்பங்களை வழங்குதலும் அவர்களின் ஆளுமை விருத்திக்கு உதவும்.

இதைவிட கல்லூரிகளும் கல்விசார் நிறுவனங்களும் மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதில் அர்த்தமான பங்களிப்பைச் செய்யமுடியும். ஆரம்ப பாடசாலைகளும் கல்லூரிகளும் ஆளுமை வளர்ச்சிக்கான தனியான திட்டம் ஒன்று வகுப்பது அவசியம். இத்திட்டத்தில் வினைத்திறனான ஆங்கிலக் கல்வியுடன் கணனி அறிவை வழங்குதல் மற்றும் ஆளுமை விருத்தியை வழங்கக்கூடிய நிகழ்வுகளான விளையாட்டு, மொழித்திறன், பட்டிமன்றம், நாடாளுமன்றம், பேச்சுப் போட்டி, சமூகசேவை போன்றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்தக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி வழிநடத்தல் இன்றியமையாதது. இத்தகைய செயற்பாடுகளினூடாக ஒரு மாணவன் தான் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெற முன்பே கணிசமான ஆளுமையை விருத்தி செய்துகொள்ள முடியும்.

எஸ்.ராஜதுரை
பீடாதிபதி,
விவசாய பீடம்

தற்போதைய பல்கலைக்கழக கல்விமுறையில் மாணவர்களின் ஆளுமை பற்றியும் அதனை விருத்தி செய்வதற்குரிய வழிமுறைகளை பற்றியும் பெரிய அளவில் அக்கறை திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படாதிருப்பது வருந்தத்தக்க ஒரு நிலைமை. இதனால்தான் இன்று பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் பல மாணவர்கள் தகுதியான தொழில் வாய்ப்பைப் பெறமுடியாது இருக்கிறது. ஒரு மாணவனுடன் ஒரு சில நிமிடங்கள் உரையாடிய பின் நீர் ஒரு பட்டதாரியா என்று கேட்கும் அளவுக்கு அவரின் ஆளுமை அமைய வேண்டிய இடத்தில் அவர்தான் ஒரு பட்டதாரி எனக்கூறிய பின் இவர் ஒரு பட்டதாரியா? என அங்கலாய்க்கும் நிலைமை இன்று காணக்கூடியதாக இருக்கிறது. இந்நிலையை மாற்றி பல்கலைக்கழகங்களில் மாணவரின் ஆளுமை விருத்தி செய்யக்கூடிய திடகாத்திரமான திட்டங்கள் அவர்களின் பாடவிதானத்துடன் சேர்க்கப்படவேண்டும். இவற்றிற்கு பின்வரும் செயற்பாடுகள் உறுதுணையாக அமையலாம்.

### ஆங்கில அறிவு விருத்தி

பல பீடங்களில் போதனை ஆங்கிலமொழியில் இருந்தாலும் நான்கு வருடம் ஆங்கிலத்தில் கல்விகற்று வெளியேறும் மாணவனின் ஆங்கில அறிவு மிகக்குறைவாகவே இருக்கிறது. கற்பிக்கும் ஆசிரியரின் ஆங்கிலத்திறமை, கற்பிக்கும் முறை, ஆங்கில நூல்களை வாசித்து அதன்மூலம் தங்களுக்கு கொடுக்கப்படும் வேலைகளைத் திறமையாக செய்துமுடித்தல். ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் ஏனைய வேலைகளை (Assignment) ஆங்கிலத்தில் தயாரித்து அதைக் கூட்டத்தில் வாசித்து விவாதித்தல் போன்ற செயல்முறைகள் ஆங்கில அறிவை வளர்க்க உறுதுணையாக இருக்கும். அத்துடன்சகல வசதிகளையும் உள்ளடக்கிய, ஆங்கில அறிவை பல நவீன யுத்திகளைக் கையாண்டு கற்பிக்கும் ஒரு தனியானதுறை பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட வேண்டும். இத்துறையை உருவாக்கி ஆரம்பகாலத்தில் சிறப்பான சில ஆங்கில ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் பொறுப்பை British Council போன்ற நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து நிறைவேற்றலாம்.

### கணனி அறிவும், பயிற்சியும்

பொதுவான கணனி அறிவும், மாணவர்கள் கல்வி கற்கும் துறைகளில் அவற்றின் செயல்முறை கற்றலில் வினைத்திறனான கணனிப் பாவனையும் பல்கலைக்கழகங்களில தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும் தற்பொழுது உள்ள வசதிகள் போதாத நிலையில் இருப்பது ஒரு குறைபாடாக உள்ளது. இவை நிவர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்தில் எந்தவொரு மாணவனும் தான் விரும்பிய நேரத்தில் கணனியை சுதந்திரமாக பாவித்து அறிவைப் பெருக்கக் கூடிய அளவில வசதிகள் செய்யப்பட வேண்டும். செய்தித் தொடர்புகளையும் பாடவிதானத்துடன் கூடிய தகவல்களையும் கணனி வலைப்பின்னலூடாக சகல மாணவர்களும் பெற்று தமது கல்வியை மேம்படுத்தும் சிறப்பான அமைப்பு முறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

### சிறப்பான நூலக வசதி

அபிவிருத்தியடைந்த நாடுகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் தமக்கு வேண்டிய அறிவையும், தகவல்களையும் நூலகத்தில் நூல்களை வாசித்து அறிவதன்மூலமும் கணனி வலைப்பின்னல்மூலமும் பெற்று விருத்தி செய்துகொள்கிறார்கள். அங்கு கடமைபுரியும் பல ஆசிரியர்களும் இவற்றை நடைமுறைப்படுத்தும் ஏற்பாட்டாளர்களாகவே (Facilitators) தொழிற்படுகிறார்கள். மாணவர்கள் தங்களது பட்டத்தை நூலக வாசனைமூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். இங்கே எமது மாணவர்கள் தமது அறிவை வளர்க்கவும், தகவல்களைப் பெறவும் நூலகத்தைப் பயன்படுத்தும் தன்மை மிகக்குறைவாக இருக்கிறது. மாணவர்கள் தங்கள் ஆளுமையை விருத்தி செய்வதற்கு இத்தகைய செயற்பாடு இன்றியமையாதது. நாம் நாளாந்தம் செய்யும் கருமங்களைப் போல நூல்களைப் படிப்பதை ஒரு நாளாந்த கருமமாக சகல மாணவர்களும் பழக்கிக் கொள்ளவேண்டும்.

### நிர்வாகப் பயிற்சி

பல்கலைக்கழக மட்டத்தில் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கும் நிர்வாகப் பயிற்சி வழங்குவது மிக அவசியமாகும். தொழில் நிர்வாகம், நிதி நிர்வாகம், வியாபாரம், சந்தைப்படுத்தல் போன்ற துறைகளில் வழங்கப்படும் பயிற்சிகள் அவர்களின் ஆளுமையை வளர்ப்பதுடன் சிறந்த தொழில்வாய்ப்பைப் பெறவும் உதவுகிறது.

மேலே கூறப்பட்டவாறு பெற்றோரும், கல்வி நிலையங்களும் மாணவர்களின் ஆளுமை விருத்தியில் ஆக்கபூர்வமான பங்கை வகித்தாலும் இதிலே பூரண வெற்றிபெறுவது ஒவ்வொரு மாணவனும் இதன் முக்கியத்துவத்தை விளங்கிக்கொண்டு தனது ஆளுமையை விருத்தி செய்யக்கூடிய செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு செயற்படுவதில் தங்கியுள்ளது.

☆

உள்ளூர் வெளியூர் சர்வதேச தொடர்புகளுக்கு
கிறிஸ்மஸ் பண்டிகைக்கான விசேட சலுகை
எமது கையடக்கத் தொலைபேசியை வாங்கும்
புதிய வாடிக்கையாளர்களுக்கு
நாளை 25.11.2002இல் இருந்து
25.12.2002 கிறிஸ்மஸ் வரையிலும்
1000/- பெறுமதியான ஒரு KIT CARD
முற்றிலும் இலவசம்
மேலும் விலைச் சலுகைகள்




| | புதிய விலை | பழைய விலை |
| --- | --- | --- |
| ALCATEL | 12425/= | 12950/= |
| SAGEM | 11950/= | 12950/= |

இந்த வாய்ப்புகளை முந்துங்கள்
✦ தனியாகவும் இணைப்புக்கள் வழங்கப்படும்.
(SIM CARD)
தொடர்புகளுக்கு அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகத்தர்கள்
DIAL LINKS
THE PHONE SHOP
இல.204, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



தொலைபேசி இல. 0777 736469
தொலைபேசி இல. 222 5485
எமது DIALOG அலைவரிசை
வெகு விரைவில் குடாநாடு முழுவதும்
விஸ்தரிக்கப்படவிருக்கின்றது.
(C/25053)

பண்டத்தரிப்பில்

## 'கெயர்' அனுசரணையுடன் நெற்செய்கை பயிற்சிநெறி

'கெயர்' நிறுவனம் தமது வயல் பாடசாலைத் திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் அனுசரணையுடன் பண்டத்தரிப்பில் நெற்செய்கை பயிற்சிநெறி ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதற்கான மாதிரி துண்டம் ஒன்று பண்டத்தரிப்பு வயல் காணி ஒன்றில் அமைக்கப்பட்டு ஏ.ரி.402 இன விதை நெல் நாற்று அதில் நடப்பட்டுள்ளது.

நான்கு மாதகால விளைச்சலையுடைய இந்த நெற்பயிருக்கு செயற்கை உரம் எதுவும் போடப்படுவதில்லை என்றும் -

இயற்கை பசளை மட்டும் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் -

இரசாயன கிருமிநாசினியும் பயன்படுத்தப்படுவதில்லை என்றும் - பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் ச.செல்வரத்தினம் தெரிவித்தார்.

30 விவசாயிகள் இந்த பயிற்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு கெயர் நிறுவனத்தின் விவசாய வெளிக்கள பயிற்சி உத்தியோகத்தர்களினால் பயிற்சியளிக்கப்பட்டு வருவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-135)

# இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சை மூலம் ஆஸ்துமா, சலரோகம், மூல வியாதி(Piles), உடல்பருமன், முகப்பரு, இளநரை, தலைமுடி கொட்டுதல், தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக, குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக் குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்குத் தனிப்பட்ட முறையில் சிகிச்சைகளும், மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**Dr.R.K.நவனீதன்** DYNS:SMP:NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
யாழ்.உல்லாசப் பயணியர் விடுதி,
இல.54, மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

முந்துங்கள்! முகாம் முடிவுற இரண்டு நாள்களே உள்ளன.

(10918)

முகாம் நடைபெறும் நாள்கள்:
நவம்பர் 24, 25ஆம் திகதிகளில்
அடுத்த முகாம் டிசெம்பர் 25 ஆம் திகதிக்கு மேல்.


# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



2ஆம் லெப்டினன்ட்
**இளையதம்பி**
*(நாகேந்திரம் கருணாகரன்)*

மண்ணில் பிறப்பு 06.02.1976
மண்ணில் விதைப்பு 24.11.1995

மகனே! விடியலை நோக்கிய பயணத்தில்
மண்ணில் நீ விதைக்கப்பட்டிருக்கிறாய்!

*கொத்தியால்,*
*பலாலி, வசாவிளான்.*

உன் நினைவுடன்
அப்பா, அம்மா, சகோதரர், உறவினர்.

(10927)

# ஓராண்டு நினைவலைகள்

மண்ணில்
20 - 06 - 1922



விண்ணில்
05 - 12 - 2001

**திருமதி முருகேசு தங்கம்மா**
**திதி:24.11.2002**

மண்ணை விட்டுச் சென்ற
மாண்புமிகு தெய்வமே!
மனமதில் அணையாத ஜோதியே!
ஓராண்டு ஆனதம்மா
ஓயவில்லை எம் துயர்!
ஆறவில்லை எம் காயம்!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*111/13, இராஜசிங்கம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/25055)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## தம்பிராசா சிவனடியான் (கிளி)

*(முன்னாள் கார் உரிமையாளரும்,*
*தேவி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் - அச்சுவேலி)*

மட்டுவில் தெற்கு, வாகையடி வீதியைப் பிறப்பிடமாகவும் வளலாய் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா சிவனடியான் கடந்த 20.11.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற செல்லத்தம்பி மற்றும் தங்கம்மா ஆகியோரின் மருமகனும் பாலசரோஜினிதேவியின் பாசமிகு கணவரும் தவமணி, பாக்கியநாதன் (கனடா), இரத்தினவரதர் (ராசா, உழவு இயந்திர உரிமையாளர்), வரதலட்சுமி (ஆயுள்வேத வைத்திய சாலை, கைதடி), சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கல்பனா, காண்டீபன் (கனடா), சசிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிஸ்கந்தராஜாவின் அன்பு மாமனாரும் திபிர்ணாவின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.11.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தீர்த்தாங்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துரையையா அவனியூ*
*சந்நிதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி.*

தகவல்
சி.பாலசரோஜினிதேவி (மனைவி)

(10928)

## மீள்குடியமர்வு குறித்த ஆலோசனைக் கூட்டம்

வடமராட்சி,நவ.24

வடமராட்சியில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளான துறைமுகததடி, கொட்டடி, முதலாம், இரண்டாம் குறுக்குத்தெரு, சின்னத் தோட்டம் ஆகிய இடங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று காலை 9 மணிக்கு உசனில் உள்ள 55 ஆவது பிரிக்கேட் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் கொட்டடி கிளை உறுப்பினர்களை படையினர் அழைத்துள்ளனர். (ம-173)

## மிதிவெடியில் சிக்குண்டு இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,நவ.24

காட்டுப்பகுதிக்குள் விறகு வெட்டச் சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டு காலில் படுகாயமடைந்தார்.

வரணிப்பகுதியில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில், அவ்விடத்தைச்சேர்ந்த திருநாவுக்கரசு அருட்செல்வம் (வயது 27) என்பவரே இவ்வாறு இடது காலில் காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (எ-15-139)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

கொக்குவில்,நவ.24

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் பணிமனையில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-76)

## முதியோர் இல்லத்துக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.24

கைதடி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியவர்களின் நலனோம்பு பணிகளுக்காக 3 ஆயிரம் ரூபா பணம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பிறவுண் வீதியைச் சேர்ந்த சமாதான நீதிவான் இ.மாசிலாமணி இப்பணத்தை முதியோர் இல்ல நிர்வாகியிடம் வழங்கியுள்ளார். (ஐ)


## தொலைபேசி தேவை

எமக்கு மேசைத் தொலைபேசி, இணைப்புடன் தேவைப்படுவதால் விற்க விரும்புவோர் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: T.P.No:
0777 - 728394
0777 - 731821

(10929)


## தவறிவிட்டது

22.11.2002 வெள்ளிக்கிழமை தாவடிக்கும் நல்லூருக்கும் இடையில் தாங்கச் சங்கிலி ஒன்று பென்ரனுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**கணேசன் கொம்மியூனிக்கேஷன்,**
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில் சந்தி.
T.P. : 222 - 2585

(10924)


**நாகம்ஸ்** சுன்னாகம்

விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
**யூத்**
(ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (புதிய நேரம்)

(10917)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

விஜய், சுவலட்சுமி, மந்த்ரா நடித்த
**லவ் ருடே**
(ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (பு.நேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மட்டும்
UNIVERSAL SOLDIER (ஆங்கிலப்படம்)

(C/24617)

**ராஜா** யாழ்ப்பாணம்.

3ஆவது வாரம்
அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த
**வில்லன்**
(ரீலஸ்)



கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் ச.திருஞானத்தின் அன்புத் தாயார்

**சபாரெத்தினம்-பாக்கியலெட்சுமி**

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கிறோம்.

**அதிபர், ஆசிரியர், ஊழியர்.**
*துரைச்சாமி ம.ம.வி., வேலணை.*

(10926)

# மரண அறிவித்தல்கள்

## இரத்தினம் பொன்னுத்துரை

*(இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் - சி.ஐ.டி.)*

சாவகச்சேரி, கற்குழியைப் பிறப்பிடமாகவும், பதுளையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் பொன்னுத்துரை அவர்கள் 20.11.2002 புதன்கிழமை பதுளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் தையல்நாயகியின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பரமானந்தன் மற்றும் புஸ்பரத்தினம், சதானந்தன், அருளானந்தம், விவேகானந்தன், காலஞ்சென்ற புஸ்பறஞ்சினி மற்றும் புஸ்பராதா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சிவராசரத்தினம், செல்வராணி, தனேஸ்வரி, யசோதரா, சிவம் லோகநாதன் ஆகியோரின் அருமை மாமனாரும், மயூரன், விபுலன், வித்தியா, தீபா, வதனா, கோகுலன், ஜீவிகா, கோபி, லவன், மதன், ரூபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல. 42/2, கிளினிக் வீதி, யாப்பனாவத்தை, பதுளை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பதுளை பொது மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (தொலைபேசி இல. 072-558374 / 055-29212)

*பாரதி வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*
(10923)

தகவல்:
செல்வன் கோகுலன் விவேகானந்தன் (பேரன்)

## வன்னிக்குட்டி சீனியர்

*(சேனார்)*

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் பருத்திக் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வன்னிக்குட்டி சீனியர் நேற்று (23.11.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பருத்திக்கலட்டி,*
*சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.* (10922)

தகவல்:
நவரத்தினம் (கிளி - மகன்)

## யோன் ஜேக்கப் (இராசதுரை)

யாழ்ப்பாணம், மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த யோன் ஜேக்கப் (இராசதுரை) 22.11.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாமுவேல் - யோன் மேரிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சுரேஸ் (சுவீஸ்), சதீஸ், ஜெனா, சாந்தி, சயிந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் றதி, சங்கர்,யசி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அருளம்மா மற்றும் துரைராஜா, மணி, வேவி, றூபி, அல்பேட், தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சரவணை - வள்ளி ஆகியோரின் அன்பு மருமகனும் சரஸ்வதி, ஐயம்பிள்ளை, மரியதாஸ், தனவதி, மணியம், மார்க்கண்டு, குணவதி ஆகியோரின் மைத்துனரும் டீனு, டீபன், சங்கீதா, திலக்சன், டறுஞ்சிகா லினா ஷீயேனி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/25056)

தகவல்
ஜே.சதீஸ் (மகன்)

## கந்தையா திருநாவுக்கரசு (K-T. அரசு)

(முன்னாள் காசாளர், சீவம்ஸ் ஹோட்டல் - கொட்டாஞ்சேனை)

உடுவில், காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருநாவுக்கரசு நேற்று (23.11.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*காளிகோயிலடி,*
*உடுவில், சுன்னாகம்.*
(10930)

தகவல்:
க.முத்தையா (தமையன்)

## செல்லையா இராசேந்திரம் (மற்றாஸ்)

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசேந்திரம் அவர்கள் நேற்று (23.11.2002) சனிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் நல்லடக்க விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*2ஆம் கட்டை,*
*இராச வீதி,*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.* (10931)

தகவல்:
**திருமதி இ.பெர்ணதேத்தம்மா** (திரவியம், மனைவி)

## தம்பிராஜா பிலிப்புப்பிள்ளை இன்மனுவேல்

*(ஓய்வு பெற்ற P.W.D. உத்தியோகத்தர்)*

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், இராசாவின்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா பிலிப்புப்பிள்ளை இன்மனுவேல் 22.11.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா - மரியப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிசிலியம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜெறோம் மற்றும் புளோரன்ஸ்பவானி, காலஞ்சென்ற பிலிப் தம்பிராஜா, கலிஸ்ரஸ் (மோகன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் எ.கெ.த.தேவதாசன், மேரிமக்ரலின் (ஆசிரியை, புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயம்), ரேவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பியூட்டி பிறிஜெட், றொய்சி அக்குயினா, மச்சுவல் பற்றசன், ஜெசிக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.11.2002) திங்கட்கிழமை நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம், இராசாவின்தோட்ட இல்லத்திலிருந்து சில்லாலை கதிரைமாதா ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பி.ப. 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முகவரி:
*45,இராசாவின் தோட்டம்,யாழ்ப்பாணம்.*

தகவல்:
எ.கெ.த.தேவதாசன் (மருமகன்)

(10934)

# நாட்டின் பாதுகாப்புக்கென...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்படவேண்டிய மாற்றங்கள் குறித்து ஆராயவென நியமிக்கப் பட்ட பாதுகாப்பு மறுசீரமைப்புக் குழுவின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான லெப்.ஜெனரல் டெனிஸ் பெரேரா இவ்வாறு தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தரைப்படையினரின் நடவடிக்கைகளுக்கென தனியானதொரு கூட்டுத் தலைமையொன்றையும் கடற்பகுதிகளின் கண்காணிப்பிற்கென தனியானதொரு கூட்டுத் தலைமையையும் உருவாக்குமாறு பாதுகாப்பு மறுசீரமைப்புக் குழு சிபாரிசு செய்துள்ளது.

பொருளாதார வலயங்களைப் பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக தனியானதொரு கடற்படைக் கட்டளைப் பீடம் அமைக்கப்படும்.

புதிய சிபாரிசுகளின்படி முப்படைகளும் கூட்டுத் தலைமை ஒன்றின் கீழ் கொண்டுவரப்படவுள்ளன. இது பாரிய மாற்றமாகும். தற்போது முப்படைகளும் இணைந்து செயற்படுகின்றன. எனினும் அவற்றுக்கிடையில் ஒருங்கிணைப்பு இருக்கவில்லை. பாதுகாப்பு உயர்மட்டத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும் என்பதற்கு அதுவும் ஒரு காரணமாகும்.

கூட்டுத் தலைமையை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழு ஒன்று கையாளும். சீர்திருத்த நடவடிக்கைகள் மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படும். மூன்றாவது கட்டத்திலேயே முப்படையினரதும் எண்ணிக்கை பற்றிய விடயங்கள் தீர்மானிக்கப்படும்.

பாதுகாப்பு அமைச்சின் கீழேயே முப்படைகளும் வரவுள்ளன. பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்துக்கு பதில் அளிப்பவராக இருப்பார்.

கூட்டுப் படைத் தளபதியை அரசு நியமிக்கும். அவரே பாதுகாப்புப் படைகளின் தளபதியாக இருப்பார். - என்றார்.

(ம)

## ஒஸ்லோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும் என்று தெரிவித்த அவர், மாநாட்டில் போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுவது முதல் வீதிகளைத் திருத்துவது வரையிலான அனைத்துச் செயற்றிட்டங்களுக்கும் உதவிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

உடனடி நடவடிக்கைகளுக்கான குறிப்பிடத்தக்களவு வளங்களைத் திரட்டுவதே எமது முக்கிய நோக்கமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

(ம)

## ஒஸ்லோசெல்லும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருடன் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல.பீரிஸ், பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் உட்பட ஒன்பது பேர் அக்குழுவில் சென்றுள்ளனர்.

தற்சமயம் இந்தியா சென்றுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேரடியாக லண்டன் சென்று பிரதமர் குழுவுடன் இணைந்துகொள்வார்.

அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தியாவில் இருந்து கொழும்பு திரும்பி இன்று நேரடியாக ஒஸ்லோ செல்வார்.

பிரதமர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் 15 பத்திரிகையாளர் கொண்ட குழுவும் நேற்று ஒஸ்லோவுக்கு புறப் பட்டது.

(ம-3)

## கொடிகாமத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கந்தசாமி குபேதினி (வயது 14) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இனந்தெரியாத சிலர் தமது வீட்டை நோக்கி 'ரோச் லைட்' வெளிச சத்தைப் பாய்ச்சியதாகவும் -

அதன் பின்னர் கதவு தள்ளப்பட்டதாகவும் - கதவு சற்றுத் திறந்ததும் அந்த இடைவெளி வழியாக வீட்டுக்குள் கிரனேட் வீசப்பட்டதாகவும் -

காயமடைந்தவர்கள் தெரிவித்தனர்

(ம-3-12)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லோவுக்குப் புறப்படுகிறார். அவருடன் பாரியார் அடேல் பாலசிங்கமும் டாக்டர் ஜோய் மகேஸ்வரனும் செல்கிறார்கள்.

அரச குழுவுக்குத் தலைமை தாங்கிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றே ஒஸ்லோவுக்குச் சென்றுவிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோடு மட்டுமல்லாமல் ஜப்பானின் விசேட தூதுவர் யசுமி அகாஷி மற்றும் பல நாடுகளின் முக்கியஸ்தர்கள் ஆகியோருடன் பாலசிங்கம் பேச்சு நடத்துவார் என்றும் லண்டன் வட்டாரங்கள் 'உதயனு'க்குத் தெரிவித்தன.

சமாதான ஆதரவு மாநாடு 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை ஆரம்பமாகிறது. அதற்கு முன்னோடியாக ஞாயிற்றுக்கிழமை மாலையில் மாநாட்டுப் பிரதிநிதிகளின் ஒன்று கூடல் நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது. இது ஒருவகையில் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கான வரவேற்பு நிகழ்ச்சியாக அமையும்.

இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் முக்கிய பிரமுகர்கள் அனைவருடனும் அன்ரன் பாலசிங்கம் சிறிது நேரமாவது பேச இருக்கிறார் என்று லண்டன் வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்று முத்திரைகுத்தி தடை செய்திருக்கும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் முக்கிய அரசியல் தலைவர்களும் இந்த நிகழ்ச்சிகளில் பிரசன்னமாகி இருப்பர்.

நோர்வேயில் உள்ள இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தியும் தனது குழுவினருடன் சமுகமளித்திருப்பார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒஸ்லோ சமாதான ஆதரவு மாநாட்டில் அன்ரன் பாலசிங்கம் என்ன பேச இருக்கிறார் என்று கேட்டபோது முக்கியமாக வடக்கு - கிழக்கிற்கான உதவி பற்றியே பேசுவார் என்று லண்டன் வட்டாரங்கள் தெரிவித்தன.

இருபது வருடகாலப் போரினால் வடக்கு - கிழக்கு சிதைந்து, சீரழிந்து போயிருக்கிறது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் வீடுவாசல்கள், காணி பூமிகளை இழந்து அகதிகளாக அவல வாழ்வு வாழ்கிறார்கள் .

மக்களைத் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமர வைக்கவேண்டும். அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவேண்டும். வடக்கு - கிழக்கை முற்றாகப் புனர் நிர்மாணம் செய்யவேண்டும். ஆங்காங்கெனாதபடி எங்கும் விதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்ற வேண்டிய மனிதாபிமானப் பணி - அவசரப் பணி வேறு இருக்கிறது.

இவற்றிற்கெல்லாம் நிறையப் பணம் வேண்டும். உதவி வழங்கும் நாடுகள் வடக்கு-கிழக்கிற்கு தாராளமாக வழங்கவேண்டும். இந்தத்தொனியில்தான் அன்ரன் பாலசிங்கம் பேசுவார் .

மற்றப்படி கொள்கை விளக்கம் செய்வதற்கு சமாதான ஆதரவு மாநாடு ஏற்ற இடமுமல்ல. ஒவ்வொருவரும் பேசுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள குறுகிய நேரம் அதற்குப் போதுமானதும் அல்ல.

என்றாலும் 20 வருடப் போரில் இணையற்ற 'வெற்றிகள் பலவற்றை ஈட்டிய' புலிகள், இப்போது போரை முற்றாகக் கைவிட்டுவிட்டார்கள். சமாதான முயற்சியில் அர்ப்பணிப்புடன் முழுமையாக ஈடுபட்டிருக்கிறார்கள். பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண விழைகிறார்கள். ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்ளத் தயாராகி விட்டார்கள். இந்தச் செய்தியைக் கூற பாலா தவறமாட்டார் என்று லண்டன் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஒஸ்லோ மாநாடு முடிந்ததும் பாலா 26ஆம் திகதி லண்டன் திரும்புகிறார்.

(ம)

# சர்வதேச சமூகத்திடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளன.

இரு தரப்பினரும் இணைந்து இவ்வாறான ஒரு கோரிக்கையை விடுப்பது இதுவே முதற்றடவையாகும்.

கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதான முயற்சிகள் மூலமாக இருதரப்புக்களும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் காண்பதற்கும், உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் இழப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. எனினும் மக்களின் தேவைகளை நோக்கி எமது கவனத்தை திருப்ப வேண்டிய நேரம் இது. இதன் மூலம் ஒருவகை சமத்துவத்தை ஏற்படுத்தலாம். விடுதலைப் புலிகளும் அரசும் கடந்த பெப்ரவரியில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமைக்கு இதுவே காரணம்.

யுத்தநிறுத்தம் நீடிக்கின்றது. இதில் மீறல்கள் உள்ளதை ஏற்றுக் கொள்கின்றோம். பல பாடங்களை கற்றுள்ளோம். துப்பாக்கிகள் அமைதியாக உள்ளன. நீண்டகாலமாக பிரிந்திருந்த குடும்பங்கள் இணைந்துள்ளன. தடைசெய்யப்பட்ட பகுதிகளுக்குள பொருள்கள் செல்கின்றன. காவலரண்கள், முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் படையினர் பாடசாலைகளிலிருந்தும், கோயில்களில் இருந்தும் வெளியேறியுள்ளனர். யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் உதவியுடன் இதனைச் செய்துள்ளோம்.

சமாதானத்தின் மூலம் மக்கள் உடனடியாக பலாபலன்களை அனுபவிக்காவிடில் சமாதான முயற்சிகளின் பலாபலன்கள் இழக்கப்பட்டுவிடும் என இருதரப்பும் கருதுகின்றன. யுத்தம் காரணமாக சகல மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். தென்பகுதியில் இது ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் யதார்த்தமாக உள்ளது. எனினும் வடக்கு - கிழக்கு மக்களே இதன் பெரும் சுமையை சுமக்க வேண்டியுள்ளனர் என்பதற்கு சான்றுகள் உள்ளன.

இலங்கை அரசு எவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டாலும் இந்தத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய நிலையில் அதற்கான வளங்கள் இல்லை - என்றுள்ளது.

(ம)

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு வழங்கவென சேகரித்த உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு நேற்றுமுன்தினம் சென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் குறிகாட்டுவானில் வைத்து கடற்படையினரால் திருப்பி அனுப்பப்பட்டது தெரிந்ததே.

மீண்டும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் பொது அமைப்பின் பிரதிநிதிகளும் நேற்று குறிகாட்டுவானுக்குச் சென்றனர்.

நெடுந்தீவைச் சொந்த இடமாகக் 'கொண்டவர்களைத் தவிர வேறு எவரையும் அங்கு செல்ல அனுமதிக்க முடியாது என்றும் -

நெடுந்தீவுக்குச் செல்ல படகுகள் இல்லை என்றும் - கடற்படையினர் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து மாணவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக நெடுந்தீவிலிருந்து இரு படகுகள் குறிகாட்டுவானை நோக்கி வந்தன.

குறிகாட்டுவானில் தங்கிநின்ற நெடுந்தீவுவாசிகளை மட்டும் படகில் செல்ல அனுமதிக்க முடியும் என கடற்படையினர் தெரிவித்ததை அடுத்து அங்கு பெரும் வாக்குவாதம் மூண்டது. ஆத்திரமடைந்த மாணவர்கள கடற்படையினரின் பாதுகாப்பு நிலைகளை உடைத்துக்கொண்டு உள்ளே செல்ல முனைந்தனர்.

அச்சமயம் கடற்படைச் சிப்பாய் ஒருவர் ஆகாயத்தை நோக்கிச் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தார்.

இந்நிலையில் அங்கு வந்த கண்காணிப்புக் குழுவினர் இருதரப்பினருடனும் கலந்துரையாடியதை அடுத்து அமைதி நிலை திரும்பியது.

மாணவர்கள் எடுத்துச்சென்ற பொருள்களுடன் யாழ்ப்பாணம் திரும்பினர்.

(ம-3)


## மணிவிழா நாயகர்

சுன்னாகம் கதிரைமலை சிவன் தேவஸ்தான பிரதமகுரு
பிரம்மஸ்ரீ கலாநிதி
நா.சோமாஸ்கந்தக் குருக்கள்
அவர்களுக்கு
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நடத்தும்
பாராட்டு விழா

*காலம்* : இன்று (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00மணி
*இடம்* : நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபம்
*தலைவர்:* பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகர சிவாசாரியார்
*- தலைவர், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.*
(10937)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி
சிறிநாதன் கங்காதேவி

குழந்தையின் முகத்தைப் பார்த்து
குலவியே மகிழும் முன்னால்
அழைத்தனன் உன்னை அந்தகனந்தோ
ஆற்றாமை உற்றோம் நாமே!

அன்னாரின் திடீர் மறைவினால் துயருறும்
*யாழ்ப்பாணம்* மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்.
ஈஸ்வரன் ரேடர்ஸ்
(C-25059) ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிறிநாதன் கங்காதேவி

காரைநகர், நாவலடிக்கேணியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிறிநாதன் கங்காதேவி நேற்று (23.11.2002) சனிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் சிறிநாதனின் (மகாலட்சுமி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அருமை மனைவியும் ஒரேயொரு பெண் மகவின் அருமைத் தாயாரும் பேரம்பலம் - லீலாதேவி தம்பதியினரின் அன்புமகளும் கௌரிதேவி, தவமணிதேவி, கமலாதேவி, மயூரன், துவாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மார்க்கண்டு - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் மங்கையர்க்கரசி, மகேஸ்வரி (டென்மார்க்), தனலட்சுமி (கொழும்பு), சரோஜாதேவி (ஆசிரியர், கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம்), சிறிதரன் (சந்திரன் - லண்டன்), விஜயகலா ஆகியோரின் மைத்துனியும் தில்லைநாதன், கிருபாநந்தன் (டென்மார்க்), யோகநாதன் (கொழும்பு), மகேஸ்வரன் (இந்து கலாசார அமைச்சர்) ஆகியோரின் சகலியும் சுதன், நிவாசினி (டென்மார்க்), பவதாரணி, பிரணவன், பவித்ரா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்து அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா.சிறிநாதன் (கணவர்),
(கணக்காளர், மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்)
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

*நாவலடிக் கேணி,*
*காரைநகர்.* (C/25058)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சங்கரப்பிள்ளை (செல்லப்பா) சரஸ்வதி

பன்னாலையைச் சேர்ந்த திருமதி சங்கரப்பிள்ளை சரஸ்வதி நேற்று (23.11.2002) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் சௌந்தரநாயகி (டென்மார்க்), சிவபாலசுப்ரமணியம், வரதராஜப்பெருமாள், பூரணலிங்கம், சோதிமலர், பத்மநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்ரமணியம் (டென்மார்க்), சந்திராதேவி, தங்கம், யோகராணி, விநாயகமூர்த்தி (சவூதி), யோகரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பன்னாலை, கேணிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பன்னாலை,* தகவல்:
*தெல்லிப்பழை.* (10936) சோதிமலர் (சோதி - மகள்)

### திருமதி சரஸ்வதி குலசேகரம்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி குலசேகரம் அவர்கள் நேற்று (23.11.2002) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குலசேகரத்தின் அன்பு மனைவியும் அரசநாதன் (பிராந்திய முகாமையாளர், கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம் **(B.M.C.),** யாழ்ப்பாணம்), திருமதி சுபுஸ்பராணி (கச்சேரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி அ.கமலாம்பிகை (பேபி), இ.சுகுமாரன் (பாபு) ஆகியோரின் அன்பு மாமியாரும் தயாநந்தன் (பொறியியலாளர், லண்டன்), அஞ்சுலன் (பொறியியலாளர், லண்டன்), ரதீஸ் (லண்டன்), தனுஜா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.11.2002) சனிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் இல. 176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வண்ணார்பண்ணை கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.176/1, நாவலர் வீதி,* தகவல்:
*யாழ்ப்பாணம்.* (10935) கு. அரசநாதன (மகன்)

### நிர்மலன் சந்திரபோஸ்

யாழ்ப்பாணம், 5ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் தற்சமயம் கனடாவில் வசிந்தவருமாகிய நிர்மலன் சந்திரபோஸ் அகால மரணமானார்.

இவர் நிர்மலன் பிரேமாவதியின் அன்பு மகனும் சிவாரம்மாவின் பேரமகனும் சிங்கராஜாவின் (மாநகர சபை, யாழ்ப்பாணம்) மருமகனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.10, 5ஆம் குறுக்குத்தெரு,* தகவல்:
*யாழ்ப்பாணம்.* (C/25லல) ம.சிங்கராஜா (மாமன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 36ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

விவசாயிகளின் நம்பிக்கைக்கு
பாத்திரமான
ஜினசேனவின்
மற்றுமோர் உன்னத தயாரிப்பு
Agrimec கை உழவு
இயந்திரங்கள்



ஜினசேன லிமிட்டட்
இல. 4. ஹுனுப்பிட்டிய வீதி, கொழும்பு -02.
தொ.பே: 326558, 326559, 448848

# பொலீஸ், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுக்கள் நியமனம்

கொழும்பு,நவ.24

தேசிய பொலீஸ் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு ஆகிய இரண்டு ஆணைக்குழுக்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்திருக்கிறார்.

அரசமைப்புச் சட்டத்தின் 17ஆவது திருத்தத்தின்கீழ் ஜனாதிபதி இந்த நியமனங்களைச் செய்திருக்கிறார். உறுப்பினர்கள் விவரம் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரிய தேசிய பொலீஸ் ஆணைக்குழுவின் தலைவராகவும் வெளிநாட்டுச் சேவை சிரேஷ்ட அதிகாரியான ரொட்னி வெண்டர்கோட் அரச சேவை ஆணைக்குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறனர். (ஓ)


## மேசைத் தொலைபேசி விற்பனைக்கு

டயலொக் (சிம்) போடக்கூடிய மேசைத் தொலைபேசி விற்பனைக்கு உண்டு. டயலொக் கைத்தொலைபேசி அலைவரிசைக்குரிய அன்ரனாக்கள் உடன் பூட்டித்தரப்படும்.

தொடர்பு: சிங்கப்பூர் பீடா 174, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(ராஜா தியேட்டர் முன்பாக)

T.P: 0777-242416

(10914)


## கண்ணீர் அஞ்சலி



**அமரர் யோண் யேக்கப்**

(இராசதுரை)

மலர்வு 1938-09-23 உதிர்வு 2002-11-22

அன்போடு அருகிருந்து ஆதரவு மொழி பேசும்
என் அருமை மாமாவே! எங்குற்றீர் எம்மைவிட்டு?
பண்போடு வாழ்ந்து பார்போற்ற உயர்ந்திட்ட
கண்போன்ற உம்மையும் காலன் கவர்ந்தானோ?

ஆத்மாசாந்தி பெறுக.

நீர்வேலி. (C/25049) சங்கர் மருமகன்.


## PX சிறந்த பூஸ்டர் நியாய விலையில்




- எந்தவொரு பலவீன சமிக்ஞைப் பகுதியிலும் பெறக்கூடியதாயுள்ள 35 உயர் பூஸ்டர் தொழிற்பாடு.
- மிகு நேர்த்தி நுட்பம் வாய்ந்த தாழ்வான ஓசை
- உங்கள் வீட்டின் உட்புறத்துடன் பொருந்தும் நீருட்புகா டியூலக்ஸ் உறை.

**TV சென்டர் (Pvt. Ltd.)**

4, கெய்ஸர் வீதி, கொழும்பு 11, தொ.பேசி: 434742
தொலைநகல்: 437687 மின் அஞ்சல்: tvcentre@eureka.lk

PX அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாய்வான் தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்பட்டது.

## கெமரா பழுது பார்த்தல்

1975 ஆம் ஆண்டில் இருந்து 25 வருடங்களுக்கு மேலாக, அனுபவமிக்க, விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன் மதிப்பையும், பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்.

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன், அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை, ஒரு வருட உத்தரவாதம்!




டிஜிட்டல், எப்டின் ஏந் விடியோ கெமரா, லென்சஸ், ஸ்டில் கெமரா பிளாக்ஸ்சேர்விஸ், ஃபிளாஸ் கன்கள்

**DURST ELECTRONICS (PVT) LTD.**

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போன்: 575480, 565756
P.G. மார்ட்டினுக்கு எதிரிலும், நேஷனல் ஷோரூம் மற்றும் ஹோட்டல் ரேணுகா மத்தியிலும் (கடல் பக்கம்)


## உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

### வடக்கு - கிழக்கு மாகாண சபை

### வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்(நிகொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
“ஆஅவ” கடன் இல.1846 - SRI(SF)

# கேள்வி கோரல் - இல.02

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (“ஆஅவ”) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக வவுனியா மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | ஆகக் குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | VA/NECORD/ED/09 | மதியாமடு விவேகானந்த வித்தியாலயத்தில் 110'x25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம். | 1, 000.00 | M8 | 15,000.00 |
| 2. | VA/NECORD/ED/10 | சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தில் 110'x25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம். | 1, 000.00 | M8 | 15,000.00 |
| 3. | VA/NECORD/ED/11 | பாலமோட்டை நவ்வி ஸ்ரீவாணி வித்தியாலயத்தில் 110'x25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம். | 1, 000.00 | M8 | 15,000.00 |
| 4. | VA/NECORD/ED/12 | மாறாவிலுப்பை அ.த.க. பாடசாலையில் 110'x25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம். | 1, 000.00 | M8 | 15,000.00 |
| 5. | VA/NECORD/ED/13 | மன்னகுளம் அ.த.க.பாடசாலையில் 110'x25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம். | 1, 000.00 | M8 | 15,000.00 |
| 6. | VA/NECORD/ED/14 | விஞ்ஞானகுளம் அ.த.க.பாடசாலையில் 110'x25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம். | 1, 000.00 | M8 | 15,000.00 |
| 7. | VA/NECORD/ED/15 | பெரியமடு அ.த.க.பாடசாலையில் 110'x25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம். | 1, 000.00 | M8 | 15,000.00 |
| 8. | VA/NECORD/ED/17 | கோவில் குஞ்சுக்குளம் அ.த.க.பாடசாலையில் 110'x25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம். | 1, 000.00 | M8 | 15,000.00 |
| 9. | VA/NECORD/HE/03 | புளியங்குளத்தில் மத்திய மருந்தகமும், பதிவு வைத்திய அதிகாரி அரச குடிமனையும் புனரமைத்தல். | 1, 000.00 | M7 | 65,000.00 |
| 10. | VA/NECORD/ID/01 | வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் கூட்டு அரச குடிமனை நிர்மாணம் | 1, 000.00 | M7 | 35,000.00 |
| 11. | VA/NECORD/AG/01 | நெடுங்கேணியில் கமநல சேவை நிலையம் புனர்நிர்மாணம். | 1, 000.00 | M7 | 40,000.00 |
| 12. | VA/NECORD/AG/02 | வவுனியா மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் (DATC) விவசாயக் கிணறும் தண்ணீர் தாங்கியும் நிர்மாணம். | 1, 000.00 | M8 | 15,000.00 |
| 13. | VA/NECORD/AG/03 | நெடுங்கேணியில் விவசாய போதனாசிரியர் அலுவலகம் புதுப்பித்தல். | 1, 000.00 | M9 | 6,000.00 |
| 14. | VA/NECORD/AG/05 | உலுக்குளத்தில் விவசாய கேந்திர நிலையம் புனர்நிர்மாணம். | 1, 000.00 | M7 | 30,000.00 |
| 15. | VA/NECORD/AG/06 | கனகராஜன்குளத்தில் அரச குடிமனையுடன் விவசாய போதனாசிரியர் அலுவலகம் புனர்நிர்மாணம். | 1, 000.00 | M8 | 15,000.00 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்த காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்டாட்"டுடன் மேற்படி M7இற்கும் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது, வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உடாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

IV. "இக்டாட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

4. பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, வவுனியாவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 024- 22589, பக்ஸ்: 024 22590, ஈ-மெயில்: necordva@sltnet.lk

6. ஒப்பந்த ஆவணங்களை நவம்பர் 22இலிருந்து டிசெம்பர் 09 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, பந்தி 2இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவுமீது கொள்வனவு செய்யப்படலாம்.

7. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று, இதன் NECORD அலுவலகத்தில் டிசெம்பர் 5 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

8. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்கவேண்டும்.

9. அந்தந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, வவுனியா" விற்கு டிசெம்பர் 13 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்க அனுப்பப்படவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**க.கணேஷ்,**

**தலைவர்,**

**மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்,**

**வவுனியா மாவட்டம்.**

(C/25050)

## சமீபத்தில் வன்செயல்களில்

# பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்காததற்கு 'ரேபியா' விளக்கம்

வாழைச்சேனை, காஞ்சிரங்குடா, மாலிகாவத்தை ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்களில் பாதிக்கப்பட்டோருக்கு இன்னும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை என்று புனர்வாழ்வு அதிகாரசபையின் (ரேபியா) பிரதிப் பணிப்பாளர் எஸ்எம்பதுர்தீன் தெரிவித திருக்கிறார்.

கடந்த ஜூன் மாதம் வாழைச்சேனையில் நடைபெற்ற சம்பவங்களில பாதிக்கப்பட்டோருக்குக் கூட நஷ்டஈடு வழங்குவதற்கான நிதியுதவி இன்னும் அரசினால் வழங்கப்படவில்லை எனவும் காஞ்சிரங்குடா சம்பவத்தில் பாதிக கப்பட்டோருக்குரிய நஷ்டஈடுகளுக்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலாளரிடமிருந்து இதுவரை கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மாளிகாவத்தை வன்செயலில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்குவது சம்பந்தமாக அறிவுறுத்தல் கொழும்பு மாவட்ட செயலகத்தால் வழங்கப்பட்டபோதிலும் பணக் கொடுப்பனவு இடம்பெறவில்லை என்றும் நஷ்டஈடு தொடர்பான ஆவணங்கள் அதிகார சபைக்கு இன்னும் வந்து சேரவில்லை என்றும் பிரதிப்பணிப்பாளர் மேலும் தெரிவித்திருக்கிறார். (ஓ)

## 'லைசென்ஸ்' வழங்குவதற்கான

# செயன்முறைப் பரீட்சை இல்லை எனினும் எழுத்துப் பரீட்சை நடக்கும்

## உதவி ஆணையாளர் தகவல்

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான செயன்முறைப் பரீட்சைகள் இம்மாதம் நடைபெறமாட்டாது என்று யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும், நேற்று ஆரம்பமாகிய எழுத்துப் பரீட்சைகள் திட்டமிட்டபடி எதிர்வரும் 29ஆம் திகதிவரை நடைபெறும் என்றும் - இம்மாதம் நடைபெறவிருந்த செயல்முறைப்பரீட்சைகளில் தோற்றுவதற்கு அனுமதிபெற்றவர்கள், எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் யாழ். செயலக மோட்டார் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தமக்குரிய புதிய திகதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# உயிர்களில் இறைவனைக் காண்போம்

இன்று எம் மண்ணிலே மட்டுமல்ல, உலகத்திலே மலிந்துவிட்ட ஒரு பொருள் மனித உயிர். தினமும் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கின்றபோது நாம் காணக்கூடியது மனித உயிரின் அழிவையும், அவலத்தையும்தான். மதத்தின் பெயராலும், இனத்தின் பெயராலும், வர்க்கத்தின் பெயராலும் மனித உயிர்கள் சாகடிக்கப்படுகின்றன. எந்த ஒரு சிறிய விடயத்திற்காகவும் மனித உயிர்கள் பாறிக்கப்படுகின்றன.

'பாடசாலையில் ஏழு வயதுச் சிறுவன் சுட்டத்தில் பதினான்கு சிறுவர்கள் பலி....', 'அறுபது பயணிகள் ரயிலுடன் தீமூட்டி எரிப்பு...', 'அதிநவீன ஏவுகணைத் தாக்குதலில் 24 பேர் உடல் சிதறிப் பலி.....', 'ஜெட் விமானம் விபத்துக்குள்ளானதில் 260 பேர் கருகி மரணம்', 'பாரிய நில நடுக்கத்தால் 50 ஆயிரம் பேர் ஒரு சில நிமிடங்களில் புதையுண்டு மரணம்', 'கொடுமை தாங்கமுடியாமல் மனைவி கணவனைத் துண்டுதுண்டாக வெட்டிக் கொலை...', 'பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த 8 வயதுச் சிறுமி 3 இளைஞர்களால் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை...'

இவ்வாறான சம்பவங்களைப் பற்றித்தான் தினமும் கேள்விப்படுகின்றோம்; வாசிக்கின்றோம்; நேரில் காண்கின்றோம்; ஏன்?... அவைகளோடு சம்பந்தப்பட்டும் இருக்கின்றோம். ஏன்? இவ்வாறான சம்பவங்கள்தான் தினமும், அடிக்கடி நடைபெறுகின்றன என்று சிந்தித்திருக்கிறோமா? இவற்றிற்கெல்லாம் அடிப்படைக்காரணம் என்ன? என்று அறிய முற்பட்டிருக்கிறோமா?.... இல்லை... இல்லை... இல்லவேயில்லை.

ஏனென்றால், இவற்றை அடிக்கடி பார்த்தும் கேட்டும் எமக்குப் பழகிப்போய்விட்டது. இவையெல்லாம் நடந்தால் எமக்கென்ன, எனக்கா நடந்தது,என்ர வீட்டிலையா நடந்தது என்ற மனநிலை தோன்றிவிட்டது. ஆம், எமது மனங்கள் எல்லாம் ஈரமற்ற கல்மனங்களாகக் கடினப்பட்டுவிட்டன. மனச்சாட்சியைச் சாகடித்துவிட்டோம். அதனால், இவைகள் எமக்குப் பெரிய, கனமான காரியங்களாகத் தெரியவில்லை. இவற்றைத்தான் நாமும் சில வேளைகளில் கூசாமல் செய்கின்றோம்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

ஆம், அன்பார்ந்த சகோதரங்களே! எம்முடைய இந்நிலை தவறு, மிகப் பெரும் தவறு, மிகவும் ஆபத்தானது என்பதை நாம் உணரவேண்டும்.

எமது சிந்தனைகளை ஒரு கணம் நிறுத்தி, புதைக்கப்பட்டுள்ள உணர்வுகளுக்கு உயிர் கொடுப்போம். தீமைக்கும், அழிவிற்கும், பாவத்திற்கும் அடிமைப்பட்டுள்ள எமது உள்ளங்களை நிலைநிறுத்தி மனிதத்தை, இறை விழுமியங்களை உள்வாங்குவோம்.

இறைவன் மனிதனை தனது சாயலாகவும், பாவனையாகவும் படைத்தார். எல்லாப் படைப்பிற்கும் மேலான படைப்பாக மனிதனைப் படைத்தார் என வேதம் கூறுகின்றது. எனவே, மனிதன் எல்லாச் சடப் பொருள்களைவிட, தாவர, உயிரினங்களைவிட மேலானவன், மாண்புமிக்கவன், அழியாத ஆன்மாவைக் கொண்டவன். எனவே, மனிதன், மனித உயிர் மதிக்கப்படவேண்டியது தவிர்க்கமுடியாதது. மனித உயிரை உருவாக்க வல்லமை அற்ற எமக்கு அதை அழிக்கவோ, பறிக்கவோ உரிமையில்லை. ஆறாவது அறிவாகிய பகுத்தறிவை உடைய மனிதன் விலங்குகளைப் போல வாழமுடியாது.

**ம.த.சறத்ஜீவன்**

நாம் எல்லோரும் மனிதர்கள். இறைவனால் சமநிலையில் படைக்கப்பட்டவர்கள். எனவே, சமஉரிமை உடையவர்கள். நாம் ஒருவர் ஒருவரை மதிக்கவேண்டும். எவர் ஒருவருடைய உரிமைகளையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். என்னைப் போல் அவனும் இவ்உலகில் வாழ உரிமை உடையவன் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். வன்முறைக்கும், தீமைக்கும், கொலைவெறிக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். பொறாமை, பகைமை, வறுமை போன்றவற்றிற்குக் கல்லறை கட்டவேண்டும்.

அல்லாவிட்டால் நாங்களே, எமக்கு அழிவைத் தேடியவர்கள் ஆவோம். எம்முடைய உயிர்களுக்கு நாங்களே புதைகுழி வெட்டியவர்கள் ஆவோம். மிருகங்களாக அல்லாமல் மனிதர்களாக வாழ முயற்சிப்போம். அப்போதுதான் மனிதவர்க்கம் இவ் உலகிலேயே மிஞ்சியிருக்கும். மனித உயிர் பறிப்புக்களுக்கும், அழிவுகளுக்கும் முற்றுப்புள்ளி கிடைக்கும். ☆

# இந்த வார இராசி பலன்

## 24.11.2002 ~ 30.11.2002

| | | | |
|---|---|---|---|
| | | சனி ரா. | சந். |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | |
| | சூரி. ▲ கேது புத. | வெள். | செவ். |

**மாற்றம்:**

**★ 24.11.2002 புனர்பூச நட்சத்திரம் மிதுனம் இராசியல் சந்திரன் நிற்கும்.**

**பிற்பகல் - செவ்வாய் - துலாம் இராசிக்கு மாறும்.**

**★ 30.11.2002இல் புதன் - தனுசு இராசிக்கு மாறும்.**

**கலகம் பிறந்து நியாயம் பிறக்கும். சோறு வேகி இறக்கும் நேரம் பானையை அடித்து நொருக்கும் நிலை ஏற்படாமல் பார்ப்பது அரசியல்வாதிகளின் கடமையாகும். உலக நாடுகள் ஒன்றுபட்டு எடுக்கும் முயற்சிகளை குழப்புபவர்கள் குழம்பிப் போக நேரிடும். அரசியல் பேச்சு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளில் மதவாதிகள், தீவிரவாதிகள் திசைமாறி நின்று மனம்மாறிச் செயற்படும் நிலைதோன்றும். இந்தியா இறுக்கமான தொனிபோடும். கடைசி சுற்றில் என்ன நடக்குமோ என்ற ஏக்கம் மக்களிடம். மத்திய கிழக்கில் மக்களின் வேதனை, இஸ்ரேலின் அடாவடித்தனம், ஈராக்கில் ஐ.நாவின் கடும் அழுத்தம் என்பன தொடர இடம்முண்டு. இந்து சமுத்தரி, பசுபிக் சமுத்திர, அரேபியக் கடல் பிராந்திய நாடுகளில் காற்றழுத்தம், மழையினால் திடீர் திடீரென அழிவுகள், வெள்ளப் பெருக்கங்கள் ஏற்படும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.**

### மேடம்

சந்தர்ப்ப சூழ்நிலைதான் ஒருவரையோ ஒரு கூட்டத்தையோ குற்றவாளியாக்குகின்றது. அதற்காக உங்களுக்கு நன்மையில்லாத செயறபாடுகளில் ஈடுபடாதீர்கள். தொழில் ஸ்தானத்தில் போட்டியான கருத்துக்களால் மனவேதனை அடைவீர்கள். பொருள் வரவு, புதிய இடம், சகோதரங்கள் சிறப்படைதல், வீடு, நிலம், வாகனச் சிறப்பு ஏற்படல், மயக்கநிலை, தாய்வழியினருடன் கருத்து வேற்றுமை, அரச அதிகாரிகளால் லாபம் அடைதல் என்பனவும் வாய்வுத் தொல்லை, உஷ்ண, குளிர் பீடைகளும் கொடுக்கும். எண்ணெய்த்துறை, பாதுகாப்புத்துறை, சந்தைவியாபாரத்துறை போன்ற துறையினர்கள் ஆதாயம் அடைவார்கள். மாணவர்களுக்குப் பரீட்சை சித்திகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி.*

### இடபம்

வாழ்க்கையே ஒரு விளையாட்டுத்தான். அதில் வரும் பாவ, புண்ணியம், இலாப நஷ்டங்கள் விளைந்து வரும் முத்துக்களாகும். தொழில்ஸ்தானத்தில் புதிய கருத்துச் சொல்லல், எதிர்ப்பாலருடன் தர்க்கித்தல், பெரியவர்கள் உதவுதல், தூரத்துச் செய்திகள் வரல் என்பன நடக்கும். தொண்டை நோ, சளித்தொல்லை, கைகால் விறைப்பு என்பவை வரலாம். இசைத்துறை, வாசனைப்பொருள்கள் விற்பனை, வீடியோ, வங்கித்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மை. மாணவர்களுக்கு சித்தி மத்திம பலனைத் தரும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி.*

### மிதுனம்

தன்னை ஏமாற்றியவனை ஏமாற்றத்தான் மனம் ஏவும். மன்னிக்கும் மனம் தெய்வ மனமாகும். மன்னிக்க முயற்சி எடுக்கவும். தொழில்ஸ்தானத்தில் வாக்குச் சித்தி, பணவரவு, எதிர்ப்பாலரால் தொல்லைகள் என்பனவும், இனஜன உதவி, நண்பர்களின் ஆலோசனை உதவிகள் என்பனவும், மாணவர்களுக்கு விசேட சித்திகளும் கொடுக்கும். எதிரிகள் பதுங்குவார்கள் வயிற்றுநோ, வாய்வுத் தொல்லை, தொண்டைநோ, குளிரால் விறைப்பு என்பன கொடுக்கும். பொருளாலும் இருக்கும் இடத்தாலும் தொல்லைகள் ஏற்படும் குருத்துறை, சந்தைத் துறை, மரத்துறை செய்தித்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி.*

### கடகம்

பசிக்குச் சாப்பாடு போட்டால் பாவத்தில் ஒரு பகுதி பறந்து போகும் என்பார்கள். நாம் உழைப்பதில் ஒருவருக்கு தானதர்மம் செய்வதனால் செழிப்புவரும் என வேதம் சொல்லுகிறது. தொழில்ஸ்தானத்தில் புதிய துறைகளால் நன்மைவரும். பொருளாதார வரவு அதிகரிக்கும். நடை, உடை பாவனையில் ஒரு மிடுக்கு, ஊர் சுற்றல், எதிலும் ஒரு அலட்சியத் தன்மை, மறதி, கால் பிடிப்பு, குளிரால் விறைப்பு என்பன வரும். மாணவர்களுக்கு அந்நியரின் உதவிகள் கிடைக்கும். பரீட்சையில் சித்திகள் கிடைக்கும். அரசியல்துறை, பலசரக்கு வியாபாரத்துறை, குருத்துறை போன்றவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி.*

### சிங்கம்

பணத்திற்காக மனிதர்கள் பிணமாகும் நிலை வரும்வரை அலைந்து கொண்டிருக்கின்றார்கள். எத்தனை கொடுமை, பொய்களை இவ்வுலகில் விதைக்கின்றார்கள். இவர்களைக் கண்டும் காணாதவர்களாக இருப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் பல நன்மைகளும் மாற்றங்களும் ஏற்படும். விட்டுவிட்டு புதுச் செய்திகள் வரும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். புதிய நண்பர்கள் உதவுவார்கள். நாரி நோ, காய்ச்சல், கைகால் பிடிப்பு என்பனவரும் குருத்துறை. மாணவர்களுக்குக் கல்விச் சித்தி வரும் காலமாகும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி.*

### கன்னி

எவருக்கும் ஒரு எல்லைவரையும் தான் எதிர்பார்ப்புக்கள். அது கிடைக்காது எனத் தோன்றினால் எதைச் செய்தாவது அதைப் பெற முயற்சிப்பார்கள். தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். காணி, பூமியில் நன்மை, மாற்றங்கள் கொடுக்கும். எதிரிகளை வெல்லுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் அபிப்பிராய பேதங்கள் வரலாம். எனவே அவதானமாக இருக்கவும். நாரி நோ, கைகால் பிடிப்பு, குளிர் விறைப்பு கொடுக்க இடம் உண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி.*

### துலாம்

மாணவர் வாழ்க்கையே ஒரு போராட்ட வாழ்க்கைதான். இந்த வயதில் போராடி பெறமுடியாததை எந்த வயதில்தான் பெறமுடியும் என ஏங்காத உள்ளங்கள் இல்லையெனலாம். தொழில்ஸ்தானத்தில் போட்டிகள் வந்தாலும் சமாளித்தபடி இருக்க முயல்வீர்கள். எதையும் எதிர்கொள்ளுங்கள் வெற்றி தானாகவரும். தூரத்துச் செய்திகள் வரும். குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் வரும். சமாளித்துக்கொள்ளுங்கள். காய்த்த மரந்தான் கல்லடிபடும். பொறுமையாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

கொலை செய்யப்பட்ட மனிதர்களின் ஆத்மா ஆவியாக அலைந்து பிறருக்கு வேதனை கொடுக்கலாம். அதனால் அந்த ஆத்மா மேலும் அசுத்தமடைந்து பாவ ஆத்மாவாக மாறுகின்றது. கொலை செய்யாமலேயே பல துன்பங்களைக் கொடுக்கும் பலர் உங்கள் தொழில்ஸ்தானத்திலிருந்து தொல்லைகள் தருவர். அயலவர்களும் பொறாமையால் பல துன்பங்களைத் தருவர். பொறுமையாக இருக்கவும். உடல் நிலை, சாப்பாட்டைக் கவனிக்கவும். பொருளில் நிதானம், களவுகள் போகலாம். தூரத்துச் செய்தி மகிழ்ச்சி கொடுக்கும். கற்பனை வளம் மாணவர்களுக்கு, நன்மைகளைக் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.*

# மகாதேவா ஜோதிடம்

### தனுசு

அலை இல்லாத கடலும் இல்லை. உணர்வில்லாத போராட்டமுமில்லை. இவை இரண்டிற்கும் எப்பொழுதும் வரம்பு எவராலும் கட்டமுடியாது. தொழில்ஸ்தானத்தில் கோபப்பார்வை வரும். வாய்ச் சாதுரியத்தால் காரிய வெற்றி கிடைக்கும். பொருள் சுட்டுவதில் பெரும் முயற்சி எடுப்பீர்கள். அரசாங்க உதவிகள் கிடைக்கலாம். பழைய நோ வரும். கைகால் விறைப்பு, சளி, தலைப்பாரம் என்பன ஏற்பட இடம் உண்டு. எதிரிகள் உங்களைக் கண்டு ஓடுவார்கள். மாணவர்களுக்கு திறமையால் சித்தி, பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும்.

*அதிஷ்டநாள்கள்:- ஞாயிறு, வெள்ளி.*

### மகரம்

எத்தனையோ விரதங்கள் பிடித்துவிட்டேன் இன்னும் திருமணம் இல்லையே? என்பது ஓர் ஏக்கம். பிழையான பொருத்தம் பார்பவர்களால் பார்த்துக் கட்டிய கலியாணத்தில் வரும் குழப்பத்தால் மனமுடைவால் பல ஏக்கங்கள் இவ்வுலகில் மலிந்துபடியிருக்கின்றது. தோஷத்தால் எத்தனை வேதனை. எதிர்ப்பாலரால் பல தொல்லைகள் வரும். வீடு, நிலம் சம்பந்தமான பேச்சுக்கள் தொடரும். மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

*அதிஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன்.*

### கும்பம்

விதி கிடைக்கவேண்டிய காலத்தில் ஒருவருக்கு கிடைக்கச் செய்யும். அதற்காக முன்கூட்டியே அறிய முற்படுவதில் ஒரு ஏக்கம் பலருக்கு இல்லாமல் இல்லை. காதலிப்பவர் செவ்வாய் பார்க்கிறார்களா? கொழும்பில் எத்தனை மாடி கட்டுகிறார்கள். சாத்திரம்பார்க்கிறார்களா? இப்படிப் பலர் கேட்கிறார்கள்? பாராமல் செய்யலாம். எப்படியும் வாழலாம். இப்படித்தான் வாழ்ந்து - வாழ்வு செழிக்க வேண்டும் என்பவர்களுக்கு சாத்திரம் தேவைதான். தொழில்ஸ்தானத்தில் பல குளறுபடி. இனஜன உதவிகள். அயலவரின் அக்கினிப் பார்வை, விகடப் பேச்சு, அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு பரீட்சைச் சித்திகள் கிடைக்கும்.

*அதிஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன்.*

### மீனம்

விஞ்ஞானத்தைமீறி எத்தனை சம்பவங்கள் நடக்கின்றன? எல்லாம் தெய்வ இஷ்டப்படியாகும். மனிதர்கள் கருவிகள்தான். அவர்கள் எதைத்தான் சாதிக்கமுடிகிறது. தொழில்ஸ்தானத்தில் வருமான அதிகரிப்புக் கொடுக்கும். சுயசிந்தனை, டாம்பீகப் பொருள் செலவுகள் அதிகரித்தல், வீடு, வாகனச் சிறப்புக்கள், குடும்பத்தில் கருத்து வேற்றுமைவரல் என்பன ஏற்படும்.

*அதிஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன்.*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பல இன கலர்மீன்கள், மீன் தொட்டி உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு (கைக்கடக்கமான விலையில்) தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10836)

Sony Hi-Fi Setup மூன்று சீடி, விசீடீ டபிள் கசெற், ரியூனர் உட்பட 4000 Watts பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மாசிலாமணி, வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு. (10880)

நல்ல நிலையிலுள்ள 21 தொடரிலக்கமுடைய MD90 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.25, சிவன்புதுவீதி, நல்லூர். (10909)

தரமான Prima கோழிக் குஞ்சின விலை குறைக்கப்பட்டுள்ளது. Broiler 38/-, வெள்ளைப் பேடு 46/-, சிவப்புப்பேடு 50/-. முன்பதிவு செய்து 28-11-2002 வியாழக்கிழமை மாலை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10835)

TOYATA HIACE வான் 252- திறமான நிலையில். பார்வையிடும் நேரம்: ஞாயிறு காலை 11.00 மணி மாலை 4.00 மணி. தொடர்பு: இல.14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். T.P.: 3204. (10911)

Prima, Broiler மற்றும் இறைச் சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (10640)

புறொயிலர் 1Kg-110/- சுத்தம் செய்தது 1kg - 170/- மற்றும் 11/2 மாதம் நிரம்பிய சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் (100 நாள்களில் முட்டையிடக்கூடியது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (10774)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (10843)

## வீடு விற்பனைக்கு

குளக்கண்டி வீதி, கட்டப்பிராயில் இரண்டு பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய கல்வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.பத்மநாதன், குளக்கண்டி வீதி, கோப்பாய தெற்கு, கோப்பாய். (10872)

சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில் கதிரமலைச் சிவன் கோயில் சுற்றாடலில் இரு கிணறுகளுடன் 91/2 பரப்புக் காணியில் அமைந்த பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.60, வைமன் வீதி, நல்லூர் T.P No. 021-222-3557. (10876)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

நல்ல இன டாஸ்சோண்ட் (Dach shund) கறுப்பு மண்ணிற முடைய 11/2 மாதம் நிரம்பிய நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொ.கமலைநாதன், கலையரசி வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (10905)

## தவறிவிட்டது

2ஆம் வட்டாரம், புத்தூர் கிழக்கைச் சேர்ந்த பொன்னு கிருபாகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.7101 10441V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் உள்ள முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (10883)

சாந்தி நிகேதன் சுபன் ஆகிய எனது தே.அ.அ. (இல.782845829V) முகமாலைக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி. சாருபன், இல.15, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (10894)

சுதுமலை தெற்கு, பதிவாளர் ஒழுங்கையைச் சேர்ந்த தாட்சாயினி தானந்தம் என்பவருடைய கடவுச்சீட்டு (இல.K0756615) மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: தங்கமுருகன் நகை மாளிகை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (10907)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1970இல் பிறந்த அவிட்டம், லக்கினத்துச் செவ்வாய் பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று Veterinary Surgeon ஆகக் கடமையாற்றும் மணமகளுக்கு தகுந்த வரனை எதிர் பார்க்கின்றோம். விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு. விள.இல.1706. C/o உதயன். (10898)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 31, சுவாதி, கிரகபாவம் 33, செவ்வாய் தோசமற்ற, B.A பட்டதாரிப் பெண்ணுக்கும், வயது 44 புநர்பூசம், கிரகபாவம் 45 செவ்வாய்தோசமற்ற B.A ஆசிரியைக்கும் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். (44வயதுப் பெண்ணுக்கு 2ஆம் தாரமும் ஏற்றுக் கொள்ளப்படும்) தொடர்பு: இ.சற்குணநாதன், விஸ்வகுல ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (10790)

## மணமகள் தேவை

சிவில் பொறியியலாளர் 1975, செவ்வாய்க் குற்றமற்ற, அவிட்ட நட்சத்திரம் உடைய மணமகனுக்கும், 1972, செவ்வாய்க் குற்றமற்ற B.Sc. பட்டதாரி, வானிலை ஆராய்ச்சித் திணைக்களம் கொழும்பில் வேலை செய்யும் மணமகனுக்கும் மணமகள்கள் தேவை. தொடர்பு: திருக்குமரன், மங்கள ஏஜென்சி, மகாலட்சுமி தேநீர்க்கடை அருகில் K.K.S. வீதி, கொக்குவில். (10748)

லண்டனில் வசிக்கும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968 இல் பிறந்த, அவிட்ட நட்சத்திரம் 1இல் செவ்வாய், சூரியன், 72பாவம் உடைய மொறட்டுவ பல்கலைக்கழகப் பட்டதாரி மணமகனுக்கு படித்த, பண்பான, பொருத்தமான மணமகள் தேவை. சகல விவரத்துடன் தொடர்புகொள்ளவும் C/o விளம்பர இல. 1696,உதயன். (10986)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, லண்டனில் வசிக்கும், P.R. உடைய 1970 இல் பிறந்த, திருவாதிரை நட்சத்திரமுடைய, பாவம் குறைந்த மணமகனுக்கு யாழ். அல்லது லண்டனில் மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1697, C/o உதயன், யாழ்ப்பாணம். (10985)

## விவசாய உபகரணம் அன்பளிப்பு

வலிகாமம்,நவ.24

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த பல குடும்பங்களுக்கு விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்கு வசதியாக பல பொருள்களை பட்டினிக் கெதிரான நிறுவனம் வழங்கியுள்ளது.

வலி.தெற்கில் உள்ள ஒன்பது கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கே கத்திகள், அலவாங்குகள், மண்வெட்டிகள், முள்ளுக்கரண்டிகள் மற்றும் விதை வெங்காயம் போன்ற பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஏ-152)

## திருப்பாவை ஓதல் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.24

துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் அறங்காவலர் சபையினரால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் திருப்பாவை ஓதல் போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டி அடுத்த மாதம் 19ஆம் திகதி நடைபெறும்.

இதன்படி 6ஆம், 7ஆம் தர மாணவர்கள் கீழ்ப்பிரிவாகவும், 8ஆம், 9ஆம் தர மாணவர்கள் மத்திய பிரிவாகவும் 10ஆம், 11ஆம் தர மாணவர்கள் மேற்பிரிவாகவும் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியரினால் சிபாரிசு செய்யப்பட்ட விண்ணப்பங்களை அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு முன்பு வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர் சபை, துன்னாலை வடக்கு, புலோலி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-30)


### கோழிக்குஞ்சு விநியோகம்

நத்தாரை முன்னிட்டு Prima ஸ்தாபனம் எங்களுக்குத் தந்த சலுகையால் Prima Broiler 38/-, வெள்ளைப் பேடு 46/-, சிவப்புப் பேடு 50/-.க்கு 28-11-2002 வியாழக்கிழமை மாலை பெற்றுக்கொள்ளலாம். 100க்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலை. முன்கூட்டியேபதிவு செய்யவும்.

NALLUR FARM CENTRE

(நல்லூர் வீடியோ சென்றர்)

19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.


## தென்மராட்சி பகுதியில்

# மாவீரர் வாரத்தை முன்னிட்டு சிரமதானப் பணிகள் ஆரம்பம்

தென்மராட்சி,நவ.24

மாவீரர் வாரத்தையொட்டி தென்மராட்சி பிரதேசத்தில் பொது அமைப்புக்களால் சிரமதான வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

சாவகச்சேரி, மட்டுவில், கல்வயல் பிரிவுகளைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் சிரமதானப் பணிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் சந்தியிலிருந்து ஆரம்பமாகும்.

மட்டுவில் சந்தியிலிருந்து பெருங்குளம் சந்தி வரை ஒரு பிரிவினரும் கனகன்புளியடிச் சந்திவரை மற்றொரு குழுவினரும் சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை - கொடிகாமத்தில் உள்ள 'ஆனையிறவுச் சமர்' மாவீரர் நினைவாலய வளவு பிரதேச கூட்டுறவு அமைப்புக்களால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (எ-117)


# றிச்சாட் அப்பியாசப் புத்தகம்

(றிசட் அப்பியாசப் புத்தகம்)

றிச்சாட் றேடிங் கம்பனி ஸ்தாபனத்தார்

தற்போது யாழ்.குடாநாட்டில்

உங்களைச் சந்திக்கின்றார்கள்!

குறைந்த விலை

நிறைந்த தரம்




மொத்த வியாபாரிகளே!

இதோ உங்கள் கைகளுக்கு

**40 பக்க அப்பியாசப் புத்தகம் 100 இற்கு 4.35**

**80 பக்க அப்பியாசப் புத்தகம் 100 இற்கு 8.50**

120, 160, 200, 240, 320, 400 பக்கங்கள் கொண்ட அப்பியாசப் புத்தகங்களும் குறைவான விலைகளில் விநியோகிக்கப்படும்.

- இலங்கை வர்ணப்பட அப்பியாசக் கொப்பிகளின் முன்னோடிகள்.
- உலகப் புகழ் வாய்ந்த (WALT DISNEY) நிறுவனத்தின் உரிமத்தைப் பெற்ற நிறுவனம்.
- உலகப் புகழ்வாய்ந்த (WALT DISNEY) அப்பியாசப் புத்தகங்கள்.
- மேலும் பல வகை.
- 11 வகையான சந்தைப்படுத்தும் உயர் தர அப்பியாசப் புத்தகங்கள்.
- குறைந்த விலையில் உயர்ந்த தரம்.
- 800 வகையான பொருள்களின் உற்பத்தியாளரும் ஏற்றுமதியாளரும்.

றிச்சாட் கம்பனி விற்பனையாளர் உங்களைச் சந்திப்பதற்காக தற்போது பொருள்களுடன் வாகனம் மூலம் வந்துள்ளார்கள்.

இரண்டு வாரங்களில் எமது உற்பத்திகளை வாங்குவோருக்கு பரிசு வழங்கும் திட்டம் ஆரம்பமாகும். அப்போது விவரங்களையும் கூப்பன்களையும் விநியோகஸ்தர்களிடம் பெறலாம்.

யாழ் விநியோகஸ்தர்:

**S.J. & B றேட் ஏஜென்சி**
இல. 39, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
T.P.: 222 2549

**றிச்சாட் றேடிங் கம்பனி**
64, பெறக்கும்பா வீதி, குருநாகல்.
தொலைபேசி: 03722547, 33298/9
தொலைநகல்: 074 690701

(10822)